# உணர்ச்சிக்கவிஞரின் உறுதிமொழி!

அடுத்த பிறவியில் தமிழனுய்ப் பிறப்பேன்!
அப்போ தென்குலம் ஆண்டுகொண்டிருக்கும்!
கொடியும் கோட்டையும் கோலும் முரசும்!
படையும் படைத்த பைந்தமிழ் மண்ணில்
ஆர்கட்டளைக்கும் அடங்கா ஒருபுலி
மார்பு தூக்கி மலைவலம் வருதல்
ஒப்ப வீரனுய் உறுமி நடப்பேன்......
ஆவி போலும் ஆன என் தமிழை
அந்நாள் எவன் பழித்தாலும் அவனை
தாவி விழுத்திப் பாடை தந்து
தமிழரெல்லாம் சாவலம் கொணர்வேன்!
கைவிலங் கில்லாக் காலம் எனலால்
வையகம் முழுதுமே வரினும் அஞ்சேன்
பன்னீ ராயிரம் பகை வருமெனினும்
கண்ணிமைப் போழ்தில் வென்று காட்டுவேன்!
என்னைப் போலவே இளைஞர் பல்லோர்
தன்னைக் காவல் செய்யத் தமிழ்த்தாய்
அரியணை இருந்துலகாளும் அந்நாள்
வருதற் பொருட்டே இந்நாள் மார்பிடை
குண்டுகள் தாங்கிக் குருதி தோய்ந்து
சண்டைக் களத்தில் இதோ சாய் கின்றேன் ..
அடுத்த பிறவியும் அடியேன்
தடித்த பச்சைத் தமிழப் பிறவியே!

காசி ஆனந்தன்

● 4. 4. 74ல் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் 36-வது பிறந்தநாளாகும். இரண்டாண்டுகளாக சிறையிருக்கும் அத் தமிழ்க் கவிஞன் என்றோ ஓர் நாள் எழுதிய கவிதையையே மேலே தந்திருக்கிறோம். இக்கவிதை வரிகளே அவரது வைராக்கியத்துக்கு ஓர் எடுத்துக்காட்டல்லவா? — ஆர்


# சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 35

வள்ளுவர் ஆண்டு 2005, பங்குனி 25உ (7-4-74) ஞாயிறு ஏப்ரல் 7 ரபி:அவ் 13 - புத்தகம் 27 இதழ்-32


# வடக்கு, கிழக்கிலிருந்து மலையகத் தமிழர்களுக்கு உணவுப் பொருட்கள்!

## அரசு தடை விதித்தால் அது மீறப்படும்?

யூ. என். பி யுடன் கூட்டுச்சேர்ந்து அரசாங்கத்துக்கு எதிரான சட்டமறுப்பு இயக்கம் எதையும் தமிழர் கூட்டணி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடத்தாது என்று தெரிய வருகிறது.

அதே நேரத்தில், தமிழ் மக்களைப் பாதிக்கின்ற உணவு, மற்றும் பிரச்சினைகளை முன்வைத்து, தமிழ் பிரதேசத்தில் தனித்து நின்று போராடுவதென்றும் தமிழர் கூட்டணி முடிவுசெய்துள்ளது.

தமிழர் கூட்டணியின் உத்தேசப்போராட்டம் பெரும்பாலும் மலையகத் தமிழர்களின் துயர் துடைப்பதையே அடிப்படை இலட்சியமாகக் கொண்டதாக அமையலாம் என்று தெரிய வருகிறது.

(5-ம் பக்கம் பார்க்க)

# உலகத் தமிழ் மாநாட்டு திரைப்படத்துக்கும் தடை!

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது அனைத்துலகத்தமிழாராய்ச்சி மாநாட்டுக் காட்சிகளைக் கொண்ட திரைப்படத்துக்கும் அரசு தடைவிதித்து இருக்கிறது. இதன் மூலம் தமிழர்களின் கலாசார உரிமைக்கும் அரசு கழுத்தறுப்பு நடத்திவிட்டது.

அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டின் சில பல நிகழ்ச்சிகளை வி: எஸ். ரி. பிலிம்ஸ் நிறுவனரும், மாநாட்டு அமைப்புச் செயலாளருமான திரு: வி. எஸ். துரைராசா திரைப்படமாக்கியிருந்தார்.

இந்தத் திரைப்படத்தில், தமிழ் விழாவை யொட்டி யாழ்நகர் பூண்டிருந்த எழிற் கோலக் காட்சிகள், அலங்கார வண்டிகளின் ஊர்வலம் வண்டிற் சவாரி, கண்காட்சி, கலைவிழா, பரிசளிப்பு விழா, வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு கொடுக்கப்பட்ட இறுதி விருந்துபசாரம் போன்ற நிகழ்ச்சிகள் தொகுக்கப்பட்டிருந்தன.

மாநாட்டு இறுதிநாள் நடைபெற்ற பொலிஸ் தாக்குதல் பற்றிய நிகழ்ச்சிகள் முற்றாகத் திரைப்படத்திலிருந்து தவிர்க்கப்பட்டும் இருந்தது.

அப்படியிருந்தும் மேற்படி தமிழாராய்ச்சி மாநாட்டு படம், திரையிடப்படக் கூடாது என்று அரசாங்கம் தடைவிதித்து இருக்கிறது!

பொதுவாக எந்தப்படமும் தணிக்கைச் சபைக்கு போட்டுக் காட்டி ஒப்புதல் எடுத்தலே சாதாரண நடைமுறை நிகழ்ச்சி, ஆனால் இந்தப்படம், பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் — வடபகுதி டி. ஐ. ஜி, சி. ஐ. டி அதிகாரிகள் இப்படிப் பலர் கொண்ட குழுவொன்றும் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டதன் பேரில் 21-3-74ல் அவர்களுக்கு போட்டுக்காட்டப்பட்டது.

அதன் பின் — அந்தப் படம் பற்றி முடிவு ஏதும் சொல்லாமல் இழுத்தடித்துக் கொண்டு வந்து — 2-4-74ல் படத்துக்கு தடைவிதிக்கப் பட்டிருப்பதாக வி: எஸ். ரி. பிலிம்ஸ் அதிபர் திரு: துரைராஜாவிடம் தணிக்கைச் சபை அறிவித்திருக்கிறது.

இத்திரைப்படத்துக்கான காட்சி விமர்சனங்களை சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசன் அவர்கள் எழுதியிருந்தது குறிப்பிடத்தக்கது.

பின்னணிக் குரலை கந்தரோடையைச் சேர்ந்த திரு. கருணாநிதி கொடுத்திருந்தார்.

இப்படம் தயாரிப்பதற்கு வி. எஸ். ரி. பிலிம்சுக்கு ரூபா 17000 வரை செலவாகியதாக அறியப்படுகிறது.

# மலையகத் தமிழனின் பசிப்பிணி தீர்த்திட உணவுப் பொருட்கள் வாரி வழங்குவீர்!

## வடக்கு, கிழக்கு மக்களுக்கு தமிழர் கூட்டணி அழைப்பு!

ஒட்டிய வயிறுடனும், உலர்ந்த வாயுடனும் பசியாலும் பட்டினியாலும் நாள்தோறும் செத்துக் கொண்டிருக்கும் நம்உடன் பிறப்புக்களான மலையகத் தமிழ்த்தோட்டத் தொழிலாளர்களுக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உணவு சேகரித்து வழங்கிட தமிழர் கூட்டணி முடிவு செய்துள்ளது. இதற்கு உதவி புரியுமாறு வடக்கிலும், கிழக்கிலும் ஏனைய இடங்களிலும் வாழும் தமிழ் பேசும் மக்களை அறைகூவி அழைக்கிறோம்"

— இவ்வாறு தமிழர் கூட்டணிப் பிரமுகர் ஒருவர் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:—

"இந்நாட்டின் வளத்துக்காக தலைமுறை தலைமுறையாக மாடாக உழைத்து, ஓடாகத் தேய்ந்து உருக்குலைந்து போன மலையகத் தமிழன், இன்று உணவுப்பஞ்சத்தினால் பயங்கரமாகத் தாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறான்! இருந்த நகை நட்டுகளை, உடைமைகளை விற்றுவிட்டுப் பிச்சை எடுக்கிறான்; எச்சில் இலைக்கு நாயுடன் போட்டி போடுகிறான். இந்த நிகழ்ச்சிகளை எல்லாம் கண்டு கேட்டு இரத்தக் கண்ணீர் வடிக்கிறோம்.

"இங்குள்ள அரசாங்கமோ — வாயளவில் சோசலிசம் பேசிக்கொண்டு, செயலளவில் இத்தொழிலாளர்களின் பட்டினி போக்க எதுவும் செய்வதாயில்லை — இதற்குக் காரணம் அவர்கள் தமிழர்கள் என்பது தானே? உரிமை யற்றவர்கள் என்பதுதானே? பசி பட்டினி போட்டு, மலையகத்தமிழர்களை கொன்று

(4-ம் பக்கம் பார்க்க)

# பிரதமர் மீது தமிழரசு பொதுச்சபை கண்டனம்!

தமிழ் தேசிய இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழரசுக்கட்சியினதும், தமிழர் கூட்டணியினதும் முன்னணித்தலைவர்களில் ஒருவராக விளங்கும் சாவகச்சேரி பா. உ. திரு. வி. என். நவரத்தினம் தேசிய பேரவையில் பேசியது அல்ல; அவரது பேச்சையொட்டி பிரதமர் அங்கு தெரிவித்த கருத்துதான் தமிழ் சமுதாயம் முழுவதையும் அவமதிப்பதாக உள்ளது. நவரத்தினம் பேசியது தமிழ் சமுதாயத்துக்கு அவமானமா இல்லையா என்பதை முடிவுசெய்வதற்கு பிரதமருக்கு எதுவித அருகதையும் கிடையாது. எனவே திரு. நவரத்தினம் பற்றி பிரதமர் தேசிய பேரவையில் தெரிவித்த அரசியல் பண்பாடு அற்ற அருவருப்பான வார்த்தைகளை தமிழரசுக்கட்சியின் பொதுச்சபை மிகவும் வன்மையாகவும் காரசாரமாகவும் கண்டிப்பதோடு, பிரதமர் பகிரங்கமாக அவற்றை திரும்பப்பெற வேண்டும் என்றும் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பொதுச்சபை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

திரு: நவரத்தினம், பாராளுமன்ற சம்பிரதாயங்களுக்கும் சட்டதிட்டங்களுக்கும் அமைவாக மிக உயர்ந்த நிலையில் நின்று தமிழ் இனத்தின் கருத்துக்களை தேசிய பேரவையில் கூறியிருக்கிறார் என்

(5-ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# 'உணர்ச்சிக்கவிஞனே! உன்வழிதொடர்வோம்!'

## சிறையிருக்கும் ஆனந்தனுக்கு பிறந்த நாள் வாழ்த்து!

முக்கனியின் சாறெடுத்துத் தீங்கவிதை — செய்வான்
மொழியரசி கண்சிமிட்டிட வழிமறந்து — செல்வான்
தக்கோரின் அரங்கினிலே சொல்விருந்து — வைப்பான்
சங்கத்தமி ழெடுத்து செங்கரும்பிற்தொட்டு
எக்காலும் எழுந்துக்கும் உயிர் கொடுத்து — வைப்பான்
இளநங்கை போறசிரித்தெம் இதயத்தைத் — தொடுவான்
இக்காலத் திளைஞர் தீபமெனக்கூறும்
முத் தமிழ்காவலன் காசிஆனந்தன் — இவனே

— அ. தர்மதேவா.

⁂ ⁂

வற்றுத கவியூற்று உன்னுள் பெருக்கெடுத்து
கவிச் சோலை பூத்திருக்கக் காண்கிறேன்.
கற்றிட்ட அறிவினை அடைத்திடலாம்
கவி யூற்றை அடைத்திடவும் முடியுமாமோ
சற்றேனும் அறிவற்ற மனிதராலே
தமிழன்னை புதுமாலை அணிவதுண்டோ
முற்றுக உன் மாலை அணிவதற்கு
தமிழன்னை உனையழைக்க தயக்கமுண்டோ!

— வவுனியா, பெரியண்ணு.

⁂ ⁂

தமிழன் பெருமை காத்த, தனிபெரும்
தன்மானத் தீரன், காசி ஆனந்தன்,
இமியும் பிசகாத் தொண்டன், சிறையில்
இன்றும் தமிழுக்காகச், சுகங்கள் மறந்து
குமியும் கொடுங் கோல், விலங்கொடிய
குலத்தின் மக்கள் உரிமை, மீட்கத்தினமும்
தமிழின் உரிமைப் போரில், பகைவர் சாடும்
தண்டனை துச்சம் மதித்து, தானுயிர் வாழ்கின்றனே!

⁂ ⁂

நண்பன் பிறந்த ஆண்டு, ஏப்ரல் நாலில்
நல்லார் விழாவெடுக்கும், நல்லநாளினிலே,
அன்னார் சிறையி னுள்ளே, அரசின்கைதியாக
அவதிப் படுமிந் நேரம், மாற்றான் மேடைகளில்
"தந்தோம்" தமிழுக் குரிமை, என்று பேய்த்தனமாக
தமிழருள் பிளவைப் புகுத்தி, தமிழ்கூட்டணியை
நிந்தனை செய்கின்ற வேளை, நீதியை மக்களின்று
நிலைத்திடச் செய்தல்வேண்டிக், காசியை
வாழ்த்துவோமே

— மருதூர்வாணன்.

⁂ ⁂

தமிழர்களாய்ப் பிறந்த சிலர் பதவி, பட்டம்
தன்வலத்திற் காகவிந்த ஈழநாட்டில்
தமிழ்மொழியைப் பகடைக்காய் ஆக்கி அன்னைத்
தமிழ்மொழியைப் பலிகொடுத்தும் வாழும்
இந்நாள்—
தமிழ்காக்க உயர்பதவி, வருமானத்தைத்
தன்வலத்தைத் துறந்த மட்டு நகரூர் தந்த
தமிழுணர்ச்சிக் கொடுமுடியே! காசி—ஆனந்
தக் கவிஞ! தமிழ் வாழும் வரைநீ வாழ்வாய்!

—வன்னியூர்க் கவிராயர்

⁂ ⁂

அண்ணன் காசி ஆனந்தன் உவப்பிலா தமிழ்
மன்னன் இருட்டறையில் இருந்திடவோ
இன்னும் நாமென்ன பேடிகளோ, இல்லையில்லை!
பன்னும் படையுடனே களம் காண புறப்படுவோம்.

—ஆசி ஞானம்.

⁂ ⁂

தீட்டா தென்னுதமிழ் ஓவியத்தைத் தீட்டிய
தீரனே! ஈழத்தமிழருக்கு
ஊட்டாத சுதந்திர தாகத்தை ஊட்டிய
உணர்ச்சிக் கவிஞனே! அறைகவி
ஆட்டாத அரசபேரவையையும் ஆட்டிய
அஞ்சாநெஞ்சனே! யாருமே
காட்டாத கடமைதனைக் கண்முன்னே காட்டிய
கடமை வீரனே! தானுத தமிழரென
நாட்டாத முத்திரையை நிலை நாட்டிய
நின்றனுக்குக் கைமாறு என் செய்வோமோ!

—த. உதயசங்கர்

⁂ ⁂

'காசி ஆனந்தன் சிறைபுகுந்தான் தமிழினத்தின்
காவலனாய் மீண்டான் என்று
மாசில்லா வரலாறு உரைக்கும் ஓர் நாள்
வருந்தாதே எம்மினத்தின் தலைமகனே
ஆசுகவி இயற்றித் தந்து, அன்னைபுகழ் காப்பதற்கு
ஊனமிகு கைதிகள் உறையும் சிறையினிலே
தேசமிகு வெண்மதிபோல் விளங்குகின்ற தமிழ் மகனே
தெய்வத்தை வேண்டுகின்றேம் நீ வாழ்கவென்றே'

—வேலணையூர் சரவி. ஆனந்தன்.

⁂ ⁂

செத்தபே தமிழென்று செறுகளைஞ் சென்றிட்டு
செந்நீர் வடித்து நின்றான் சீர்பெறு மகாகவிஞன்
இத்துணை நாள் சிறைதனிலே இன்னல் அடைந்திட்டு
இளைத்தாலும் என் தேகம் அன்னை தமிழுக்கே
சத்தாகிப் போமென்று சாற்றி நிற்கும். இவ்வேளை
சங்கூதிப் புறப்படடா சர்க்கரைபோ உன் தேகம்?
எத்தாலும் மறவேனே என் தமிழை என்றிட்ட
எம்கவிஞன் காசி—ஆனந்தன் புகழ் வாழி!

—உடுவிலூர் கதிரவேல்

⁂ ⁂

தமிழ்மகனே தமிழ்மகனே காசி அண்ணு!
உன்தனக்கு வந்தசிறை முடிவடைந்து
தமிழ் மொழியால் தமிழ் பொங்கும் எங்கள் முன்னில்
உன்விலங்கு உடைத்துன்னை விடுவதெப்போ?
தமிழுக்காய்ச் சிறைப்பட்ட காசி அண்ணு!
உமக்காக நாமென்றும் உயிர் கொடுப்போம்
தமிழுரிமை காப்பதற்கு உணர்ச்சி பொங்கி
தைரத்தில் விலங்கேற்ருய் அச்சமின்றி.

— சம்மாந்துறை, சுலைமான் இத்ரீஸ்.

மாடாக உழைத்தாலும்
ஓடாகத் தேய்ந்தாலும்
மானந்தான் பெரிதென்றவன்
நாடாளும் தமிழ்காணச் சாக்
காடேறச் சொன்னலும்
சரியென்று நின்ற தலைவன்
தமிழ்வாழ வழிகாட்டும்
புலவர்கள் எல்லோரும்
தமை வாழவைத்த வேளை
பாரதி வழிசென்று
போராட்டக் களம்கண்டு
சிறை சென்ற இளைய தலைவன்
ஈழத்தில் ஆனந்தன்
தியாகத்துக்கிணையாக
வேறென்று நடந்ததுண்டோ
ஞாலத்தில் தமிழ்வாழ
நல்வாழ்வை நீத்தவனின்
கோலத்தை இன்றுபாராய்!

— கந்தவன்னியசிங்கம்

●

தமிழ்த் தாயின்
தவப் புதல்வன்
கவிஞன் ஆனந்தன்!
தமிழ் உணர்ச்சி
மிளிர் கவிஞன்
காசி ஆனந்தன்!!
தமிழ் இளைஞர்
உளம் வாழும்
அண்ணன் ஆனந்தன்!
தமிழ் வீரம்
ஒளிர் தமிழன்
அடலேறு ஆனந்தன்!!

— ச. முருகையா

●

கால் பிடித்து வாழுகின்ற
கயவர் வாழும் நாட்டிலே
வேல் எடுத்து போர் முடிக்க
விரையும் வீரமறவன்
வால் பிடித்து வாழுகின்ற
வடுகர் கூட்டம் அழிய,
கோலத்தமிழெடுத்து ஈட்டியாக்கி
குத்த வரும் வீரன்!
சொத்து-சுகம்-பஞ்சு மெத்தை,
கெஞ்சிப் பெறும் மூடர்—
மொத்தி—வழி—குத்தி—குடல்
வெட்டி யெடுத்தாடும்
முத்து நம் சொத்து திரு
காசி ஆனந்தன்,

க. அமீர்
முள்ளியவளை,

●

கவிஞனுக்கு ஏற்பட்ட
கதியைக் கண்டு
கண்கலங்கி கவலையுறும்
மக்களெல்லாம்
ஏன் இந்தக்கதி என்று
ஏங்கி நின்றார்
இன்னுந்தான் முடிவேதும்
தெரியவில்லை.

வீறுகொண்ட தமிழினத்தின்
விடிவை நோக்கி
விரைந்தெழுந்து விறுவிறுப்பாய்
பாடலுற்றான்
பாடலிலே பல பொருட்கள்
பொதிந்திருக்க
பாடிவிட்டான் பல கவிதை
படித்துப் பார்ப்போம்.

— இரா. பேரம்பலம்.

●

இரசிகனேயன்றி
நானிங் (கு)
அரசியல் பேசவில்லை.
"மானமொன்றிருக்கு மட்டும்
காசி ஆனந்தன்
இருந்தே யாவான்."
"நீதியை மாற்ற நின்றால்
நிரந்தர அடிமையாக்கு.
நீதியைக் கேட்டு நின்றால்
சுதந்திரப் பறவை யாக்கு."

— இது வன்றே உலக நீதி

— 'சமலிங்கன்.'

●

தாழ்வுறும் தமிழன் நிலையினை
அகற்றிட போர்க்கொடி நாட்டி
சூழ்கடல் தீவினில் தமிழ்
காத்து முரசு கொட்டி
வாழ்க்வுந் நாமம் என்று
வாழ்த்து வோம் வாழி வாழி
வாழ்க தமிழ் வாழ்க காசி
அண்ணு வாழ்க! வாழ்கவே!

— சுதுவை யூரான்

உள்ளத்தின் உணர்ச்சியெல்லாம் உருகி ஓட
ஊன் உடலின் உயிர்மூச்சும் — தமிழ்
வெள்ளத்தில் மூழ்கிவரப் புனலொழுகும்
பூக்குடலை கவிவடித்து — பெரும்
பள்ளத்தில் வீழ்ந்திருந்த பைந்தமிழர் உணர்வுகளை
துள்ளவைத்தாய் துலங்கவைத்தாய் —இன்று
வெள்ளிநிலா எறிக்காத வெங்கொடுமைச் சிறையில்
ஏன் அண்ணு வேகுகின்றாய்?

தித்திக்கும் கனியமுதச் சுவை கூட்டி
செந்தமிழனாய் கவிவடித்த காவியமே—நான்
முத்தமிடும் உன் தமிழ் கரங்களிலா விலங்கிட்டார்
புத்தியற்ற புலவர் கூட்டம் — இங்கு
எத்தனை இடர் வந்து எம்மை தாக்கிடினும்
சக்தியுள்ள உன் தங்கக் கவி பாடி
இத்தரையில் யுத்தமொன்று செய்து புத்தொளியாய்
புதுவிளக்காய் வாழ்வோம் அண்ணு

—கல்முனை நீ. தமிழ்ச் செல்வம்

⁂ ⁂

உரிமையின் வேகம் கண்டேன்
உணர்ச்சியின் ஊற்றைக் கண்டேன்
வரிப்புலி வேகம் தோய்ந்த
வன்கவி நடையைக் கண்டேன்
தெறித்தெழும் சொல்லைக் கண்டேன்
சிந்தனை வேகம் கண்டேன்
அரித்திடும் துயரில் தோய்ந்த
ஆனந்தன் கவிதை கண்டேன்

—திருமலை ஜேசுதாசன்

⁂ ⁂

சிறையினிலே எங்கள் உயிர்த்தமிழராம்—எம்
சிந்தையிலே அவர் பெயரும் நிலையாம்
சிறையினில் வாடிடும் உயிர்த்தமிழே—நான்
விரைவினில் வருவேன் உயிர் தரவே

உணர்ச்சியின் கவிஞன் நீ யல்லவோ—உன்
எண்ணமெல்லாம் இன்பத் தமிழ் ஆல்லவோ
புரட்சிக்கும் புலவன் நீயல்லவோ — உன்
புதுக்கவி சிங்களத்தின் தீயல்லவோ,

—வெள்ள மணல் யோகதாசன்

⁂ ⁂

அண்ணன் காசியானந்தன் அடித்துக்கூறியதை
திண்ணமாய்த் தம்பியர்கள் செயற்படுத்த இன்றே
அன்னை தமிழ் மேலே ஆணையிட்டுப்புறப்படுவோம்
முன்வைத்த காலை முழு வெற்றி கொண்டாலன்றி
பின்வாங்கி நில்லாது பெருமையுடன் களம்சென்று
அண்ணன் லட்சியத்தை அடைவோம் விரைவினிலே;

—கே. கே. தியாகமணி,

⁂ ⁂

தமிழ்த்தாயே! கவிஞன் வாக்குப் பொய்க்காதம்மா!
தரணியில் நீயும் ஒருநாள் ஆள்வாயம்மா!
தாயே! கவலை கொள்ள வேண்டாமம்மா!

கவிஞன் காசியும் சிறைக்கு வெளியே வந்து—உன்
கவலையற்ற வதனங்கண்டு—தன்
கவலையை மறந்து—மனம்
கசிந்துருகிப் பாடல்பாடி—உன்னை
மகிழ்விப்பானம்மா தமிழ் தாயே
மகிழ்விப்பானம்மா.

— அல்வையூர், பொன் தேவராசா.

⁂ ⁂

துணிவோடு கயவரையும் எதிர்த்து நின்று
துயருடைய தமிழனை உயிலரக்காக்கும்
பணியினிலே ஆர்வத்தோடு உழைத்தவண்ணு
பாவிகளின் கரத்தினிலே சிக்கியின்று
தனிமையாய்ச் சிறைக்குள்ளே யிருந்தபோதும்
தன்மானத் தமிழுணர்வால் உந்தப் பெற்ற
புனிதத்தமிழ் இளைஞர்கள் உனது வழியிற்
புகுதற்குத் துணிந்திட்ட நிலையைப் பாரீர்!

பற்றூர் க. தங்கவடிவேல்

⁂ ⁂

கண்ணுயிருப்பது நாம் நம் உரிமை மீதல்லோ
கண்ணுட்டம் அரசிற்கு நம் இளைஞர் மீதோ—எமது
எண்ணத்திற் தான் சிறை காசி அண்ணருக்கு!
உண்மை அவர் எம் உள்ளத்திலிருப்பது!

—இணுவை ஆனந்தகௌரி

⁂ ⁂

அரங்கு களேறி நன்கு
அருஞ்சுவைக் கவிதை பாடி
கரவோசை பொலிவாய்ப் பெற்று
கனத்த நற் புகழினோடு
பரிசாகத் தங்கம் பெற்று
பாருளோர் உவந்து போற்றும்
பெரும் புகழ் நோபலாரின்
விருதுதான் பெற்றாரேனும் —

அண்ணனே! காசி, உண்ணு!
அவர்பெயர் சில நாள் மட்டும்
அன்னை தமிழர் வாழ்வு
கலங்கிடும் நிலைமை கண்டு
மண்ணிலே குரல் கொடுத்த
மாக்கவி மன்னு! என்றும்
விண்ணுளார் போன்று நந்தம்
சிந்தையில் வாழ்வாய் திண்ணம்

எங்களின் உரிமைக்காக
எழில் முகத்தோடு சென்று
தங்கி நீ இருக்கின்றாயே
தறுகணர் வைத்த கூட்டில்
மங்காது உனது பேரோ
மாத்தமிழ் உலகில் உண்மை
எங்களின் இதயமே நாம்
தந்திடும் பரிசு ஏற்பீர்

— அனலை ஆறு. இராசேந்திரன்.

# (9) சிவபூசைக்குள் 'கரடி' புகுந்தது

நிறைகுடம் என்பார்களே — அதற்கு இலக்கணமாக எடுத்துக்காட்டாக விளங்குபவர் வணக்கத்துக்குரிய தனிநாயக அடிகளார்.

சிலர் பேரறிஞர்களாக விளங்குவார்கள்; அவர்களிடம் பண்பாடு இருக்காது! அறிவு இருக்கும், அடக்கம் அமைதி, இருக்காது! சிலர் தம்மையும் அறிஞர்கள் போல படாடோபமாகக் காட்டிக்கொள்வார்கள் — ஆனால் அவர்களிடம் ஆழம் இருக்காது. மேடைகளிலும் நாலுபேர் முன்னாலும்




அண்ணா

பேசும்போது தங்கள் பெருந்தன்மையைக் காட்டுவார்கள்; தனிப்பட்ட முறையில் பொறாமையும் குறுகிய சிந்தனைகளுமே அவர்களிடம் நிரந்தரமாகக் குடிகொண்டிருக்கும்!

பேரறிஞர் அண்ணாவிடம், ஆழ்ந்த அறிவும், அடக்கமும், அமைதியும் எளிமையும் குடிகொண்டிருந்தன. வள்ளுவர் கூறிய 'சான்றாண்மை' எனும் பண்பாட்டுக்கு இலக்கியமாகத் திகழ்ந்தவர் அண்ணா! பொறாமை, அழுக்காறு என்பனபோன்ற தீய குணங்கள் அண்ணாவிடம் துளியும் இருக்கவில்லை. மற்றவர்களை தட்டிக்கொடுத்து வளர்த்தால் — இதனால் தனது தலைமைப் பதவி பறிபோய் விடக்கூடும் என்று என்றுமே எண்ணியவரல்லர் அறிஞர் அண்ணா!

அண்ணாவைப் போலவே — ஈழத்திலும், குறுகிய நோக்கங்கள் எல்லாவற்றையும்





கடந்தவராக, பண்பாட்டின் பேரிலக்கியமாக, சான்றாண்மை என்பதன் எடுத்துக் காட்டாக ஆழ்ந்த அறிவுப் பெட்டகமாக, எளிமையின் வடிவமாக விளங்குபவர் தமிழ்த் தூதர் தனிநாயக அடிகளார்!

அவர் கத்தோலிக்க மத குருவாக இருந்தாலும், ஏனைய மதங்களின் மீது குரோதமோ வெறுப்போ கிஞ்சித்தும் இல்லாதவர். இந்துமத தேவார திருவாசக, புராணங்களை ஆழ்ந்து கற்றவர். தாய்லாந்தில் அரச முடிசூட்டு விழாவின் போது மணிவாசகரின் 'திருவெம்பாவை' இன்று கூட இசைக்கப்படுவதை ஆராய்ந்து அறிந்து, எடுத்துரைத்தனர். தமிழ் மொழிக்கு தொண்டுபுரிவதையே தம்முடைய அறமாகக்கொண்டவர்.




அத்தகைய பெருமை வாய்ந்த அடிகளாரின் வாயிலிருந்து ஒவ்வொரு சொல்லும் நிறுத்தி நிறுத்தி முத்து முத்தாக வெளிப்படுகின்றன. ஆவலோடு அதைக் கேட்டிருக்கிறார்கள் வெளிநாட்டுப்பேரறிவாளர்களும், மண்டபத்தில் திரண்டிருந்த பார்வையாளர்களும்!

வெளிநாட்டுப்பேரறிவாளர்களை வரவேற்று தம்முடைய உரையைத் தொடங்கிய அடிகளார், அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் தொடக்கம், அதன் பத்தாண்டுகாலப் பணிகள், அப்பணிகளால் ஏற்பட்டுள்ள பயன்கள், தமிழ் வளர்ச்சிக்கு அறிஞர்கள் ஆற்றிய தொண்டுகள், வெளிநாடுகளிலுள்ள அறிஞர்களிடத்து ஏற்பட்டுள்ள தமிழாராய்ச்சி பற்றிய ஆர்வம், வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் நடைபெறும் தமிழ் போதனை, யூனெஸ்கோ நிறுவனத்தின் ஆதரவுடன் சென்னையில் நிறுவப்பட்டு வரும் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்துக்கான கட்டடம், போன்ற பலவேறு விஷயங்களையும் தம்முடைய உரையில் தெளிவாக எடுத்து விளக்கிய அடிகளார் ஈழத் தமிழர்களுடைய 'நீண்ட நாள் கனவு ஒன்றையும் ஆணித்தரமாக அங்கு சுட்டிக் காட்டத்தவறவில்லை;

"இத்தகைய மாநாடுகள் பல்கலைக்கழக மட்டத்தில் நடைபெறவேண்டியவை. யாழ்ப்பாணத்தில் ஓர் பல்கலைக்கழகம் இருந்திருந்தால், இம்மாநாட்டை இன்னும் சிறப்புடன் நடத்தியிருக்கமுடியும். வட மாகாணத்துக்கு ஒரு பல்கலைக்கழகமும், கிழக்கு மாகாணத்துக்கு இன்னோர் பல்கலைக் கழகமுமாக இரு பல்கலைக் கழகங்கள் தமிழ் மக்களுக்கு வேண்டும்."

என்று வற்புறுத்திய அடிகளார், அத்துடன்விட்டுவிடவில்லை. தமிழ் ஆராய்ச்சி மேலும் விரிவடைவதற்கும், தமிழ் ஆராய்ச்சிக்கு உதவிடவும், நவீன முறையில் மிகப் பெரிய நூதனசாலை (Museum) ஒன்றும் யாழ்ப்பாணத்துக்கு அத்தியாவசியமாக வேண்டும் என்றும் வடக்கு, கிழக்கில் காணப்படும் யாழ்ப்பாண மன்னர் காலத்து வரலாற்று சின்னங்கள் பேணிப் பாதுகாக்கப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

தமிழ் ஈழத்தின் தொன்மையும், தொல்பொருளும் மேலும் ஆராயப்பட வேண்டும் வடக்கிலும், மாந்தைப் பகுதியிலும், திருக்கோணமலையிலும் ஆராய்ச்சி நடைபெற்றால் தமிழ் ஈழத்தின் தொடர்பான வரலாற்றையும், இப்பகுதிகளிலிருந்து கடந்த காலத்தில் நடைபெற்ற வணிகம் பற்றியும் நாம் கண்டுகொள்ளமுடியும்."

என்று அடிகளார் ஆணித்தரமாக வலியுறுத்தினார்.



வண. தனிநாயக அடிகள்.

ஆம், முறையான வரலாறு இல்லாத காரணத்தினால் தானே இன்று தமிழ் இனம் தாழ்ந்தது! தமிழர் நிலங்களில் யார் யாரெல்லாமோ உரிமைகொண்டாட முனைகிறார்கள்?

அடிகளாரின் துவக்கவுரையைத் தொடர்ந்து திரு. வி. எஸ். துரைராசா அவர்கள் மாநாட்டுக்கு வந்திருந்த வாழ்த்துச் செய்திகளை படிக்க ஆரம்பிக்கிறார்;

திரு. வி. எஸ். துரைராசா ஒரு சிறந்த கட்டடக் கலைஞர். தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்ற யாழ் வீரசிங்கம் மண்டபத்தின் 'பிரம்மா' கூட அவரேதான்!

தமிழாராய்ச்சி மாநாட்டுத்தொடக்க நாளன்று செல்வி. பிரெண்டா பெக், அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றத்தின் துணைத்தலைவர் திரு. ஜெனர்ட் ஆகியோர் உரை நிகழ்த்தும் காட்சி.

அவர் கட்டிடக் கலைஞரே தவிர — வேறு சில கட்டிடக் கலைஞர்களைப் போல தமிழ்ப் பகைவர்களுடன் சேர்ந்து தமிழினத்துக்கு சமாதி கட்டுபவர் அல்லர்!

## கோவை-மகேசன்

பல 'பெரிய' புள்ளிகள் எல்லாம் அரசாங்கத்துக்கு அஞ்சியோ காக்காய்பிடிக்கும் நோக்குடனே, மாநாட்டைக் கொழும்பிலே நடத்த சதி செய்த போதெல்லாம் — உறுதியுடன் மாநாடு யாழ்ப்பாணத்திலேயே நடைபெற வேண்டும் என்று வாதிட்டவர்களில் அவரும் ஒருவர்.

நான் அறிந்தவரை — தமிழ் சமுதாயத்தின் உணர்ச்சியை புரிந்துகொள்ளாமல் அவர் இதுவரை ஒரே ஒரு கருத்தை ஒரே ஒரு தடவை கூறியிருக்கிறார்:

ஈழத்தமிழர்களுக்கும் தென்னகத்துக்குமிடையே வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து இருந்து வரும் கலாசார இலக்கியத் தொடர்புகளைத் துண்டித்து, ஈழத்தமிழர்களை தனிமைப் படுத்தி அழிக்கும் நோக்குடன், தென்னக சஞ்சிகைகளுக்கும், புத்தகங்களுக்கும், சிங்கள அரசு தடையும், கட்டுப்பாடும் விதித்தது.

உள்ளூர் தமிழ் எழுத்தாளர்களையும், உள்ளூர் தமிழ் சஞ்சிகைகளையும் ஊக்குவிக்கும் நோக்கத்துடனேயே தான் இவ்வாறு செய்வதாக சிங்கள அரசு போலித்தனமானபொய்யானவாதத்தை முன்வைத்தது.

தென்னக சஞ்சிகைகளுக்கு தடையும் கட்டுப்பாடும் விதிப்பதற்கு சிங்கள அரசு கூறிய மேற்கண்ட போலித்தனமான காரணத்தை உண்மையென நம்பி மயங்கியதாலோ என்னவோ — தமிழ் மக்களுக்கு விரோதமான இச்செயலை ஆதரித்து 'தினகரனில்' அறிக்கைவிட்டிருந்தார் திரு. துரைராசா;

திரு. துரைராசாவின் இந்த அறிக்கையைப்படித்துவிட்டு, உள்ளபடியே மனம் வருந்தியவர்களில் நானும் ஒருவன்!

ஆட்சியாளரின் சூழ்ச்சிகளைப் புரிந்துகொள்ள முடி



அமைப்புச் செயலாளர் வி. எஸ். துரைராசா.

யாமல் — வெள்ளை உள்ளம் படைத்த திரு. துரைராசா, உண்மையிலேயே உள்ளூர் தமிழ் சஞ்சிகைகளை வளர்க்கத்தான் அரசு இப்படிச் செய்ததாக அப்போது கருதியிருக்கலாம்!

மூதறிஞரும், இந்திய உபகண்டத்தின் தலைசிறந்த ராஜதந்திரியுமான ராஜாஜி அவர்கள்கூட முதலில் இந்தியைத் திணித்துவிட்டு — பின் தனது தவறு தெரிந்ததும் இந்தியை எதிர்த்துப்போராடியவர்தானே!

இது ஒன்றைத்தவிர திரு. துரைராசா, தமிழ் மக்களின் கருத்துக்கு பாதகமாக எப்போதாவது இருந்ததாக யாரும் கூறமுடியாது;

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் ஆணிவேராக இருந்து அதை இயக்கியவரே அவர்தான்!

எப்படி என்கிறீர்களா?

மாநாட்டு செயலாளரே அவர்தானே! செயலாளர் தானே நிர்வாக இயந்திரத்தையே முடுக்கி விடுபவர்!

யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லம்தானே மாநாட்டு அலுவலகமாக செயற்பட்டது!

மாநாடு சிறப்புற நடந்திட ஓய்வு ஒழிச்சலின்றிப் பணியாற்றி — தமது பணி வெற்றிகண்டதென்ற திருப்தி முகத்தில் இழையோடிட திரு. துரைராசா வாழ்த்துச் செய்திகளைப் படிக்கிறார்!

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் பண்டிதத் தமிழை வாசிக்கும்போது மட்டும் அவர் சற்றுத் தடுமாறுகிறார்! தமிழைத் துறைபோகக் கற்றவர்களே பண்டிதமணியின் தமிழைப் படிக்கமுடியாமல் தடுமாறும்போது திரு. துரைராசா சற்றுச் சங்கடமடைந்தது ஒன்றும் ஆச்சரியமல்ல!

பண்டிதமணியின் வாழ்த்துரையை மட்டும் வேறு யாரைக்கொண்டாவதுபடிக்கச் செய்திருக்கலாம்!



வண. ஜோசப் விக்டி.

பண்டிதமணி தமது செய்தியில் பின்வருமாறு கூறியிருந்தார்.-

"தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்பது சங்கத்தார் ஆராய்ந்த தமிழ். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற புறநானூற்றுச் செய்யுளில் வருகின்றது இந்த அருமந்த தொடர்.

நமது இன்பதுன்பங்களுக்கு நாமே கருத்தா. இன்ப துன்ப வாயில்கள் வெறும் கருவிகள்; துன்பக்காலத்தில் துன்பத்துக்கு வாயிலாயமைந்த கருவிகளை நோவது எய்தவனிருக்க அம்பை நோவதாம்.

"மறத்துக்கும் அஃதே துணை"- என்று அன்பின் பெருமை பேசுகின்றது தமிழ் வேதம். 'மறம்' நிகழ்ந்தது. அதனைப் போக்குவதற்கு அருமருந்து அன்பே யாம் என்றவாறு.

அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி, அனைத்துலகையும் அன்புசெய்து மக்கட் பிறப்பினர் யாவரையும் ஒருமை செய்வதோர் ஆராய்ச்சியாய் அமைவதாக என்று —

விழாத் தொடக்கதினமாகிய இச்சுபதினத்தில் — தமிழ் அங்குரமாகிய அன்புமுளை கொண்டு வளரச் சங்கற்பம் செய்வோமாக!

"தமிழன்னை சகோதரத்துவத்தை வளர்ப்பாளாக!"

— பண்டிதமணி அவர்கள் மேற்கண்ட தமது வாழ்த்துரை மூலம், தமிழர் சமு



உணவு, உறையுள் பொறுப்பாளராக கடமை புரிந்த திரு. சச்சிதானந்தம்

தாயம் இன்றுபடுகின்ற வேதனைகளுக்கெல்லாம், தமிழர்களே காரணமென்பதையும், "தீதும் நன்றும் பிறர்தரவாரா" என்பதையும் எடுத்துக்காட்டி, தமிழ் மக்களுக்கு நல்லதோர் போதனையைத் [illegible]திருந்தார்!

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் தலைவர் திரு பிலியோசா, கிழக்

(6-ம் பக்கம் பார்க்க)

## எண்ணம்

# நல்ல முடிவு!

பஞ்சத்தினுலும், பசியினுலும் அன்றடம் அணு அணுவாகச் செத்துக்கொண்டிருக்கும் மலையகத் தமிழர்களுக்கு வாழ்வு அளிப்பதற்காக வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் ஏனைய பிரதேசங்களிலும் வாழும் தமிழ் பேசும் மக்களிடமிருந்து உணவுப்பொருட்களை சேகரித்து வழங்க தமிழர் கூட்டணி செய்துள்ள முடிவை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேம்!

'ஒரு தமிழன் தமிழர்க்காய் உயிர்வாழ்கின்றன் — உயிர் வாழ்வோன் தமிழர்க்கே தனை ஈகின்றன்'—என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கருத்துக்கமைய—மலையகத் தமிழன் பசியாலும் பட்டினியாலும் துடித்துச் செத்துக்கொண்டிருப்பதை — மலையகத்தில் வாழும் பிஞ்சுத் தமிழ்க் குழந்தைகள் கஞ்சிக்கும் வழியின்றி — ஒட்டி உலர்ந்து பட்டினியால் சாவதை — இந்நாட்டில் வாழும் ஏனைய தமிழர்கள் பார்த்துக்கொண்டு கண்மூடிய படி இருக்கமுடியாது!

அப்படியிருப்பவன் வெறும் மரக்கட்டையாக — உணர்வற்ற ஜடமாக — இருக்கமுடியுமே தவிர உணர்வுள்ள தமிழனாக ஒருபோதும் இருக்கமுடியாது!

இன்றைக்கு பசியாலும், பிணியாலும் செத்துக்கொண்டிருக்கும் மலையகத்தமிழன் யார்?

அவன் தான் காடாய்க்கிடந்த இந்நாட்டை பொன் கொழிக்கும் பூமியாக்கியவன்!

காடுகளை வெட்டி — ஓடாகத்தேய்ந்து — மலையகத்தில் தேயிலையையும் ரப்பரையும் உண்டாக்கியவன்!

தலைமுறை தலைமுறையாக கண்ணீரும் செந்நீரும் வியர்வையும் சிந்தி தேயிலைச் செடியை வளர்த்து வருபவன்!

மலையகத்தமிழன் சிந்தும் வியர்வையே, தேயிலையாகி, இந்நாட்டுக்கு அந்நிய செலாவணியை அள்ளித்தருகிறது.

அந்த அந்நிய செலாவணியைக் கொண்டே அமைச்சர்கள் அகிலம் சுற்றுகிறர்கள்! அந்நிய நாடுகளிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்கிறர்கள்!

இந்நாட்டு வருமானத்தில் எழுபது சதவீத வருமானத்தை உழைத்துத் தருபவர்கள் மலையகத்தமிழர்கள்!

அத்தகைய தமிழ் தொழிலாளர்கள் தான், தொழிலாளர்களின் நலனுக்காக நடைபெறுவதாக கூறப்படும் இன்றைய அரசின் கீழ் உண்ண உணவின்றி துடிதுடித்துப் பரிதவிக்கிறர்கள் என்றல் — இது என்ன சோசலிச அரசு?

அந்த மக்களின் குடியுரிமை, வாக்குரிமைகளைப்பறித்து, அவர்களுக்குப் போதிய உணவு கூட வழங்காது பட்டினி போட்டு மெல்ல சாகடிக்கிறர்கள்!

இப்படிப் பட்டினி போட்டால் ஒன்றில் அவர்கள் செத்துத் தொலையட்டும்—அல்லது இந்தியாவுக்கு ஓடட்டும் என்று அரசு கருதுகிறதா?

அதாவது—மலைநாட்டுத் தமிழர்களை இங்கிருந்துவிரட்டுவதற்கு பட்டினியை — உணவு நெருக்கடியை — ஓர் ஆயுதமாக அரசு பயன்படுத்துகிறதா என்ற கேள்வியே இன்று எழுந்து நிற்கிறது!

மலைநாட்டுத் தமிழர்களுக்கு துன்பத்தைக் கொடுப்பதன் மூலம் அவர்கள் தாமாகவே வேறு வழியின்றி இந்நாட்டைவிட்டு வெளியேறும் சூழ்நிலையைத்தோற்றுவித்து— ஓர் மறைமுக கட்டாய நாடு கடத்தலுக்கு இலங்கை அரசு சூழ்ச்சிசெய்கிறதா என்பதை இந்திய அரசு நுணுகி ஆராய வேண்டும்!

ஏனென்றல் — மலையகத்தமிழர்கள் பசிப்பட்டினியால் படும் கொடுமைகளை மலையகத் தொழிற்சங்கத்தலைவர்கள் நெஞ்சுருக நாடோறும் எடுத்துக்கூறிவருகிறர்கள்!

அரசாங்க ஆதரவு தொழிற்சங்கங்களும், அரசாங்க எதிர்ப்பு தொழிற்சங்கங்களும் மலையகத்தமிழர்களின் பரிதாப நிலை பற்றிக் கூறுவது ஒன்றகவே இருக்கின்றன.

நாளேடுகளும் நாள்தோறும் மலையகத்திலிருந்து கிடைக்கும் கண்ணீர் வடித்திடக்கூடிய செய்திகளை தந்த வண்ணமிருக்கின்றன;

எல்லாமிருந்தும் ஆட்சியாளர்கள் கேளாச் செவியர்களாக பேசாமடந்தைகளாக — மலையகத் தமிழர்களின் பசிப்பிணி துடைத்திட எதுவித நடவடிக்கையும் எடுக்காமலிருப்பதேன்?

அவர்கள் தமிழர்கள் தானே — உரிமையற்றவர்கள் தானே — செத்துத்தொலையட்டும் என்ற மாற்றந்தாய் மனப்பான்மை தான் இதற்கு காரணமா?

இந்த மனிதாபிமானப் பிரச்சினையிலும் அந்த மனப்பான்மை இருக்குமானுல்—இன்றைய அரசு ஹிட்லரின் நாஜி ஆட்சியை விடக்கொடியது என்பதற்கு சந்தேகம் இல்லை!

மலையகத் தமிழ்த் தாய் மார்கள் தங்கள் பிள்ளைகளை விலை கூவி விற்பதாகவும், பிள்ளைகள் தெருவோரங்களில் பிச்சை எடுப்பதாகவும் வருகின்ற செய்திகள் நெஞ்சைப் பிழிகின்றன.

மலையகத்தின் எதிர்காலத் தமிழ்க் குழந்தைகள் அடிமைகள் போல் விற்கப்படும் கொடுமையை பார்த்துச் சகித்துக் கொண்டு ஈழத்தின் ஏனைய தமிழர்கள் வாழா இருக்கமுடியாது!

எனவே தமிழர் கூட்டணியின் திட்டத்துக்கு முழு ஆதரவு கொடுத்து—மலையகத் தமிழனின் பசிப்பிணி தீர்க்க உணவுப் பொருட்களை வாரி வழங்குமாறு—வடக்கு, கிழக்கு மாகாணத் தமிழ் பேசும் மக்களை—குறிப்பாக தமிழ் பேசும் விவசாயிகளைக் கேட்டுக்கொள்ளுகிறேம்.

தமிழர் கூட்டணியும் தீர்மானம் போட்டுவிட்டு — தொடர்ந்து நித்திரை செய்யாது—சுறுசுறுப்புடன் எடுத்த தீர்மானத்தை செயலாக்கி, மலையகத் தமிழனின் கண்ணீரைத் துடைத்திட நடவடிக்கையெடுத்திட வேண்டுமென்று வற்புறுத்துகிறேம்!

# சம்பள உயர்வு - அரசின் மற்றேர் ஏமாற்று வித்தை!

நடுச் சாமத்திலே வீட்டிலுள்ளோர் எல்லோரும் நித்திரையில் ஆழ்ந்திருக்கும் போது அவர்களுடைய வீட்டில் கள்ளர் புகுந்து அவ் வீட்டுக்காரர்களின் பொருட்களை எல்லாம் களவாடிக் கொண்டு போவதைப் போன்று இன்றைய அரசாங்கமும் நாளுக்கு நாள் நடுச் சாமங்களிலே இந்நாட்டு மக்களின் பணத்தைக் களவாடி வருகின்றது, பொருட்களின் விலைகளை நடுச் சாமங்களிலே திடீர் திடீரென்று ஏற்றுவதன் மூலமே!

சில நாட்களுக்கு முன்பு தான் இந்த அரசாங்கம் இரண்டு ரூபாவுக்கு விற்கப்பட்டு வந்த ஒரு றுத்தல் சீனியின் விலையை நடுச் சாமத்திலே ஐந்து ரூபாயாக்கி ஒவ்வொருவரிடமிருந்தும் ஒரு றுத்தல் சீனிக்கு மூன்று ரூபாய் வீதம் களவாடியது!

இப்பொழுது, இந்தமாதம் 15ந் திகதியிலிருந்து ஒவ்வொரு கிழமையும் முப்பது சதத்தைக் களவாடுவதற்கு, இல்லை, தட்டிப்பறிப்பதற்கு நடுச்சாமத்திலே நடவடிக்கை எடுத்து விட்டது இந்த இராக் கொள்ளை நடத்தும் அரசாங்கம்!

இந்தக் கொள்ளைக்கு நட்டசடு செய்வதற்கு இந்த நாட்டில் வாழும் ஒரு சில பிரிவினருக்கு — மாதமொன்றுக்கு எண்ணூறு ரூபாவுக்குக் குறைந்த ஊதியம் பெறும் அரசாங்க, கூட்டுத்தாபன, வர்த்தக ஊழியர்களுக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்குமே— அவர்களுடைய மாதச் சம்பளத்தில் இருபது சதவீதம் வழங்கப்போகின்றதாம்! ஆனுல், இங்கு இருபது சதவீதமும் கூட முழுவதாக வழங்கப்பட மாட்டாது; ஐம்பது ரூபாவுக்கு மேல் சென்றல் அம் முழுத்தொகையும் வழங்கப்படமாட்டாது. ஐம்பது ரூபாய்தான் வழங்கப்படும். பின் எதற்காகவோ இந்த இருபது வீதம் என்ற ஏமாற்று!

மேலும், நூறு ரூபாய்க்கும் குறைவாகச் சம்பளம் வாங்கும், ஏழைத் தொழிலாளர்களுக்கு ஐம்பது ரூபாவுக்கு மேற்படாத சம்பள உயர்வு என்ற மயக்கத்தை ஏற்படுத்தி விட்டு இருபது ரூபாவுக்கும் குறைவான உயர்வு கொடுத்து ஏமாற்றுவானேன்? எல்லோருக்கும் ஐம்பது ரூபா சம்பள உயர்வு என்று கொடுத்திருக்கலாமே அப்படிக் கொடுத்திருந்தால் வாடும் அடித்தளத்திலுள்ள ஏழை ஊழியர்களுக்குச் சற்று ஆறுதலாக இருந்திருக்குமே!

இது ஒரு புறமிருக்க இந்தச் சம்பளஉயர்வு எவ்வளவு சூழ்ச்சியானது. மோசடியானது என்பதைப் பார்ப்போம்.

மின் வேகத்தில் ஏறிக்கொண்டு போகும் வாழ்க்கைத் தரத்தை, அரசாங்க கூட்டுத்தாபன, வர்த்தக ஊழியர்களும் தோட்டத் தொழிலாளர்களும் இனிமேலும்பொறுத்துக்கொள்ள மாட்டார்கள். அரசாங்கத்துக்குத் தொந்தரவு கொடுத்து விடுவார்கள் என்பதை உணர்ந்து அரசாங்கம் சென்ற வருடம் அக்டோபர் மாதத்தில் அவர்களைச் சாந்தப் படுத்தி ஏமாற்றும் பொருட்டுச் சம்பள உயர்வொன்றைக் கொடுத்திருந்தது மாதமொன்றுக்கு ரூபா 400/க்கும் குறைவாகச் சம்பளம் பெறுபவர்களுக்கு அவர்களின் சம்பளத்தில் பத்துவீதம்—ஆனுல், 20 ரூபாவுக்கு அதிகப்படாமல் கொடுத்தது. அதன்படி பார்த்தால் மாதம் ஒன்று ரூ. 400/ பெற்ற ஒருவரின் சம்பளம் ரூ. 420/ ஆகக் கொடுக்கப்பட்டது.

இப்பொழுது கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானத்தின்படி அவர்களுக்கு இம் மாதத்திலிருந்து ரூபா 450/ கிடைக்கும். சென்றமாதம் அவருக்குக் கிடைத்தது ரூ. 420/ இந்த மாதம் கிடைக்கப்போவது ரூபா 450/ ஆகவே, அவருக்கு அதிகப்படியாகக் கிடைக்கப் போவது ரூ. 30/ தான்.

இருபது சதவீத உயர்வு, ஐம்பது ரூபா உயர்வு, என்பதெல்லாம் மயக்கும் வார்த்தைகளே! ஏமாற்று வித்தையே! இவருடைய மாதச் சம்பளமாகிய ரூ.400/உடன் இருபது சதவீதம் கிடைத்திருப்தென்றல் இவருக்கு ரூபா 480/ கொடுக்கப்பட வேண்டும். ஐம்பது ரூபா உயர்வென்றல் சென்ற மாதத்தில் இவருக்குக் கிடைத்ததிலிருந்தாவது கிடைத்திருக்க வேண்டும். ஆனுல் இரண்டும் இல்லை! கிடைக்கப போவது ஆக ரூ. 30/ தான்!

இந்த முப்பது ரூபா கூட இவருக்கு முழுமையாகப் பிரயோசனப்படப் போவதில்லை!

இவருக்கு ஒரு மனைவியும் ஐந்து பிள்ளைகளும் தாய் தந்தையரும் ஒரு வேலையாளும் இருந்தால மொத்தம் பத்துப்பேருக்கும் இந்த 15ந் திகதியிலிருந்து ஆளுக்கு ஒரு கொத்து அரிசிக்கு முப்பது சதம் ரூ. 3/ கிழமைக்கு மேலதிகமாக வேண்டும்! நாலு கிழமைக்கும் ஒரு மாதத்துக்கு ரூ. 12/ வேண்டும்! மாதத்திலேகிடைக்கவிருக்கும் ரூ. 30/ல் பன்னிரண்டு ரூபாவை அரசாங்கத்துக்கே திருப்பிக்கொடுத்து விட்டபின் இவருக்குத் தேறுவது ரூ. 18/தான்! இதுதான் இந்த அரசாங்கம் கொடுத்திருப்பதாகச் சொல்லும் 20 சதவீத சம்பள உயர்வும் ஐம்பது ரூபா மேலதிகமான சம்பளமும்!

ஆனுல் இந்தப் பதினெட்டு ரூபா கூட இந்த ரூ. 400/ சம்பளகாரருக்கு எது விதத்திலும் உதவப் போவதில்லை! இந்த நிலைதான் மற்றவர்களுக்கும்:

இந்த நாட்டின் சகல மக்களினதும் அரிசியின் விலையைக் கொத்து ஒன்றுக்கு 30 சதத்தினுல் உயர்த்தியிருப்பதால் இந்த உயர்வை ஈடுகட்டுவதற்கு அவர்கள் தங்களின் சேவைக்கு கூலியையும் பண்டங்களுக்கு விலையையும் கூட்டித்தானே ஆக வேண்டும்! அவர்கள் அப்படிச் செய்யும் போது இந்தப் பதினெட்டு ரூபா அந்த ரூ 400/ சம்பளக்காரருக்கு எந்த மூலைக்குப் போதும்! உண்மையில், அரசாங்கத்தின் இந்த 20 சதவீத சம்பள ஏற்றம் ஒரு ஏமாற்று வித்தையே அன்றி வேறல்ல! சம்பளத்தைக் கூட்டி அதே வேளையில் அரிசி விலையையும் கூட்டியுள்ளது. ஒரு கையால் கொடுத்து விட்டு மறுகையால் கொடுத்ததையும் பறித்து இருந்ததையும் பறித்த கதைதான்!

நெல்லின் உத்தரவாத விலையை 5/ ரூபாவினுல் உயர்த்தி விட்டதால் விவசாயிக்குத்தானும் இதனுல் ஏதும் லாபம் வந்துவிடப் போவதில்லை! ஒவ்வொரு வாரமும் விவசாயி நெல்லு விற்பதில்லை! ஒவ்வொரு நாளும் அவனுடைய வீட்டில் அரிசியிருப்பதும் இல்லை! அவனும் அதிகவிலைக்கு அரிசி வாங்கத்தான் வேண்டும். தனக்குக் கிடைக்கும் சேவைக்கும் கூடிய கூலியும் பொருட்களுக்கு அதிகப்படியான விலையும் அவனும் மற்றவர்களைப்போலக் கொடுக்கத்தான் வேண்டும்! ஒரு புசல் நெல்லுக்கு ஐந்து ரூபா உயர்வு எந்த மட்டுக்கு காணும்? எத்தனை நாளைக்குப் போதும்?

இந்த நடுராத்திரி அரிசி விலை உயர்வினுல் இந்த நாட்டின் சாதாரண மக்கள்— மாதச் சம்பளமென்று வாங்காத, இந்த நாட்டின் சனத்தொகையில் பெருந்தொகையான மக்கள்—என்ன செய்யப் போகிறர்களோ? இப்பொழுதே பசி பட்டினி தாங்க முடியாமல் தற்கொலை செய்தும் பெற்ற பிள்ளைகளைக் கொன்றும் வரும் ஏழை மக்கள் என்ன செய்யப் போகிறர்களோ?

—அருள்—

## மலையகத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குவிப்பதன் மூலமே அந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண அரசு நினைக்கிறதா! அல்லது பசி, பட்டினி போட்டாலாவது. இலங்கையை தாயகமாக வரித்துக்கொண்ட மலைநாட்டுத் தமிழர்களை இங்கிருந்து இந்தியாவுக்கு விரட்டியடித்திடலாம் என்று அரசாங்கம் கருதுகிறதா?

"அரசாங்கம் கல்மனத்துடன், இருக்கலாம்; தமிழனைப்பற்றி அதற்கென்ன அக்கறை? ஆனுலும், ஒரே இனத்தவர்களான வடக்கு, கிழக்குத் தமிழர்கள், மலைநாட்டு தமிழன் கண்ணீர் வடிப்பதை—பட்டினியால் சாவதை—அனுமதிக்கலாமா? பார்த்துக் கொண்டிருக்கலாமா? நம்முடைய சதையின் சதை — இரத்தத்தின் இரத்தமல்லவா மலைநாட்டுத் தமிழன்!

எனவே மலையகத்தமிழன் பசிப்பிணி தீர்த்திட தமிழர் கூட்டணி தொடங்கியுள்ள உணவு வழங்கும் திட்டத்துக்கு, உங்கள் உணவில் ஒருவேளை உணவை ஒதுக்குங்கள்! வாரி வழங்குங்கள்! மலையகத்தமிழன் கண்ணீரைத் துடைப்போம்! செத்துக் கொண்டிருக்கும் அவனுக்கு உயிர் கொடுப்போம்"!

— இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழன் கண்ணீரைத் தமிழன்தான் துடைத்திட வேண்டும் — வேறுயாரும் இந்நாட்டில் அதற்கு முன்வர மாட்டார்கள்!

மலையகத் தமிழர்களுக்கு வடக்கு, கிழக்கிலிருந்து உணவுப் பொருட்களை வழங்குவதன் மூலம் — தமிழ் மக்களின் உறவும் ஒருமைப்பாடும், மேலும் இறுகவும் வழி பிறக்கும்!—இதில் எத்தனை தடைவரினும் தமிழர் கூட்டணி செயற்பட்டே தீரவேண்டும்!

# கொள்ளிவைப்பது சனநாயக தர்மத்துக்கு- இதில்- "வெள்ளி" விழா வேறொரு கேடா?

## யாழ் மாநகரசபை வரியிறுப்பாளர் குமுறல்

யாழ்ப்பாண மாநகர சபையின் ஆயுள் காலம் எப்பொழுதோ முடிந்துவிட்டது: சனநாயக ரீதியில் மக்களின் ஆணையைப் பெற்று மீண்டும் பதவிக்கு வரமுடியாது என்பதை நன்கு புரிந்துகொண்டு அமைச்சரதயவால் மாநகர சபையின் ஆயுளைக்காலவரையறையையும் கடந்து நீடித்துவருபவர்கள் தான் யாழ்ப்பாண மாநகர சபையின் வெள்ளி விழாவைக் கொண்டாட எத்தனிக்கிறார்கள். இது கேலிக்கூத்தாக இல்லை.

யாழ்ப்பாண மாநகரசபையின் வெள்ளி விழாவைக் கொண்டாட வேண்டியவர்கள் வரியிறுப்பாளரும் அவர்களது ஆணை பெற்று முறையாகப் பதவியில் அமரவேண்டியவர்களுமே அன்றி அமைச்சர் போட்ட பிச்சையால் பதவியில் ஒட்டிக்கொண்டிருக்கும் ஆள்(பிரட்டி) துரையப்பாவும் அவர் தம் கூட்டமுமல்ல.

"பிரதிநிதித்தும் இல்லாது வரி இல்லை" என்று கிளம்பிய கோரிக்கை "போஸ்டன் டீ பாட்டி"யாக மாறி அமெரிக்க சுதந்திரப் பிரகடனத்தில் முடிவடைந்தது அரசியல் வரலாறு தெரிந்தவர்கள் அறியாததல்ல

யாழ்ப்பாண மாநகர சபையிலோ நாலு வட்டாரங்களுக்கு பிரதிநிதிகள் இல்லை; இடைத்தேர்தல் தானும் கிடையாது.

இந்நிலையில் மக்களது ஜனநாயக உரிமைகள் கேலிக்கூத்தாகும் போது வெள்ளி விழாவென்னகேடு என்று வரியிறுப்பாளர் முறுமுறுக்கிறார்கள்.

இன்னொரு இரகசியமும் இதில் புதைந்து கிடக்கிறது. வெள்ளி விழா எதிர்வரும் ஜூலை மாதத்தில் தான் கொண்டாடப்படுமாம்! காரணம் மேயர் துரையப்பாவின் பிறந்த தினமும் ஜூலையில் தானே வருகிறது?

"மக்கள் மேயர்" பிறந்த நாளைப் பொது மக்கள்வலிய வந்து இனி ஒரு முறை கொண்டாட முன்வரமாட்டார்களாம்; ஆகவேதான், மாநகர சபை வெள்ளி விழாவென்ற பெயரால் மேயரது பிறந்த தினத்தைக் கொண்டாட இப்படியும் ஒருமாருட்டமா? இப்படி இன்றும் பலவிதமாக மக்கள் பேசிக்கொள்ளுகிறார்கள்.

விடயமறிந்த நல்லவர்கள் எமக்கேன் இந்த வம்புஎன்று தம்பாட்டில் ஒதுங்கிக் கொள்ள வால்பிடிப்பவர்களும், எடுபிடிகளுமே வெள்ளி விழாவுக்கு உடுக்கடிக்கிறார்கள்!

## கிறெட்சர் ஆணைக்குழு! அறிக்கை!

### தேசிய பேரவையில் சமர்ப்பிக்கப்படும்!

நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிநாளான சனவரி 10-ம் நாள் சம்பவங்கள் குறித்து விசாரிப்பதற்கு பொதுமக்களால் நியமிக்கப்பட்ட கிறெட்சர் ஆணைக்குழு தனது விசாரணை முடிவில் வெளியிட்ட அறிக்கையை தமிழர் கூட்டணி பா. உ.க்கள் தேசிய அரசப் பேரவையில் சமர்ப்பிக்கவிருக்கின்றனர். மேற்படி அறிக்கையின் அடிப்படையில் குற்றவாளிகளைத் தண்டிப்பது அரசின் கடமை என்றும் அவர்கள் அங்கு சுட்டிக்காட்டவிருக்கின்றனர்.

இந்த விசாரணைக்குழு முன்னால், பொதுமக்கள அளித்த சாட்சியங்களையும், குழுவின் தீர்ப்பையும் உள்ளடக்கிய தமிழ் பிரசுரம் ஒன்றை வெளியிடுவதென்றும், குழுவின் அறிக்கையை தமிழ் மக்களுக்கு விளக்கி, தமிழ்ஈழமெங்கும் பொதுக் கூட்டங்களை நடத்துவதென்றும் தமிழர் கூட்டணி முடிவு செய்துள்ளது

## சோசலிசத்தின் பெயரால் தொழிலாளர்களுக்கு அடி!

தொழிலாளர்களுக்கு உதவிபுரிவதாகக்கூறி கபடநாடகமாடிவரும் இன்றைய அரசு, தொழிலாளர்களைப் பொறுத்தவரை எவ்வளவு தூரம் "சோசலிசம்" என்ற போர்வையில் துரோகமிழைத்து வருகிறது என்பதற்கு இதோ ஓர் உதாரணம்!

வெள்ளவத்தை நெசவு ஆலையைச் சேர்ந்து 3250 தொழிலாளர்கள் ஆலைமூடப்பட்டதன் காரணமாக 5 மாதங்கள் வேலையின்றி தவித்தனர் இவர்களில் பெரும்பாலோர் அரசாங்க ஆதரவு தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்கள். 'சோசலிச' அரசின் கீழ் தங்களுக்கு ஊதிய உயர்வு கஷ்டமின்றி கிடைக்கும் என்று இவர்கள் நம்பியே இவர்கள் அத்தொழிற்சங்கங்களில் சேர்ந்தனர்.

ஆனால், 15.2.74ல் ஆலை மீண்டும் திறக்கப்பட்டபோது, முன்பு வேலைசெய்த அத்தனை தொழிலாளர்களும் வேலை இழந்தவர்களாகவே கணிக்கப்பட்டு, அவர்களின் பழைய சேவைகாலம் நிராகரிக்கப்பட்டு, புதியவர்களாக, புதிய நியமனங்களின்கீழ் வேலைக்கு சேர்க்கப்பட்டனர்: அதிலும் 1000 பேருக்கு ஆலைக் கம்பெனி இன்னும் வேலை கொடுக்கவில்லை.

ஆலை முதலாளிகளுடன் சேர்ந்து கொண்டு ஏழைகள் வயிற்றிலடிக்கும் போலிச் சோசலிசங்களின் ஏமாற்று வித்தைக்கு இது ஓர் உதாரணமல்லவா?

## பிரதமர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றும், நவரத்தினத்தின் பேச்சினால் தமிழ் இனத்துக்கு எவ்வித அவமரியாதையும் ஏற்பட்டு விடவில்லையென்றும் தமிழரசுப் பொதுச்சபை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கூறிய புரட்சிச் சதித் திட்டம்பற்றி ஆராய்வதற்கு தேசிய பேரவை உறுப்பினர்களைக்கொண்ட ஓர் தெரிவுக் குழுவை நியமிக்கவேண்டுமென்ற தீர்மானம் எதிர்க்கட்சியினரால் 6.3 74ல் தேசிய பேரவையில் கொண்டுவரப்பட்டது தெரிந்ததே; அத்தீர்மானத்தின் மீது அத்தீர்மானத்துக்குக் கையொப்பமிட்டிருந்த கட்சிகளில் ஒன்றான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் திரு. வி. என். நவரத்தினம் பேசியிருந்தார்.

திரு. வி. என். நவரத்தினம் தமது பேச்சில் — ஒவ்வொரு உறுப்பினர்களும் பொறுப்புடன் பேசவேண்டிய இடம் தேசிய அரசப் பேரவையென்றும் — அத்தகைய தேசிய பேரவையில், சபாநாயகருக்கு அடுத்தபடியாக மிக உயர்ந்த நிலையில்-பொறுப்புள்ள இடத்தில் இருப்பவர் எதிர்க்கட்சித் தலைவர்தான் என்றும்—எனவே பொறுப்புவாய்ந்தவர் என்றமுறையில் எதிர்கட்சித் தலைவரின் கூற்றை தாம் நம்புவதாகவும் தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் 21-3-74-ல் சபையில் பேசும்போது பின்வருமாறு கூறியிருந்தார்:-

"தமிழ் அரசுக்கட்சியினர் தாமே தமிழ் மக்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் என்றும் தமிழ் மக்கள் பெருமைக்குரியவர்கள் என்றும், அவர்கள் எப்பொழுதும் அடிமைகளாக இருக்க மாட்டார்கள் என்றும் உரத்த குரலில் உரிமை பாராட்டிவருகிறார்கள். ஆனால் திரு. நவரத்தினமோ, தேசிய அரச பேரவையில் பேசும்போது அடிமை மனப்பான்மையைக் காட்டிவிட்டார். அவரால் தமிழ் இனத்துக்கே அவமானம்!"

—மேற்கண்ட கூற்றைத்தான் வாபஸ்பெறவேண்டுமென்று பிரதமரிடம்தமிழரசுப் பொதுச்சபை கோரியிருக்கிறது. இது சம்பந்தமாக தமிழரசுக்கட்சித் தலைவர்நாவலர் அமிர்தலிங்கம் கட்சி சார்பில் பிரதமருக்கு கண்டனக் கடிதம் ஒன்றையும் எழுதியுள்ளார்.

30-3-74ல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் பொதுச்சபைக் கூட்டத்தில் 40 பேர் கொண்ட கட்சியின் மத்திய செயற்குழுவும்தெரிவு செய்யப்பட்டது. கட்சி செயற்குழு, இம்மாதம், 20, 21ம் திகதிகளில் மன்னாரில் கூடவிருக்கிறது.

## வடக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பஞ்சத்தினால் சாகும் மலையகத் தமிழ் மக்களுக்கு உதவி புரிவதற்காக தமிழர் கூட்டணி இப்போது உணவுப்பொருட்களை சேகரித்து வருகிறது. இந்த உணவுப் பொருட்களை மலையகத்துக்கு எடுத்துச்சென்று தமிழர் கூட்டணித்தலைவர்கள் விநியோகிப்பார்கள். இப்படி வடக்கு கிழக்கிலிருந்து அரிசி மற்றும் உணவுப் பொருட்களை எடுத்து சென்று மலையகத் தமிழர்களுக்கு விநியோகிப்பதற்கு அரசு தடைவிதிக்குமானால், அத்தடையை தமிழர் கூட்டணி மீறும் என்று தெரிய வருகிறது.

மலையகத்தில் நிலமின்றி தவிக்கும் தமிழர்களை வடக்கு, கிழக்கில் குடியமர்த்தும் திட்டம் ஒன்றும் தமிழர் கூட்டணியின் ஆலோசனையில் இருந்து வருகிறது.

## ஈழத்தமிழ் எழுத்தாளர் பேரவை நடாத்தும் அனைத்துலகத் தமிழ் நாவல் போட்டி

## பரிசு ரூபா-1750-00

தமிழ் இலக்கியத்தின் தரத்தை உயரச் செய்வதன் பொருட்டும் தமிழ் எழுத்தாளர்கள் தமது திறமையை வெளிப்படுத்துவதற்குச் சந்தர்ப்பமும் ஊக்கமும் அளிக்கும் பொருட்டும் ஈழத் தமிழ் எழுத்தாளர் பேரவை நாவல் போட்டி ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. முதற் பரிசாக 1000/= ரூபாவும் இரண்டாம் பரிசாக 500/= ரூபாவும் மூன்றும் பரிசாக 250/= ரூபாவும் வழங்கப்படும்

இப்போட்டியில் அனைத்துலகத் தமிழ் எழுத்தாளர்கள் அனைவரும் கலந்துகொள்ளலாம்:

போட்டிக்கு அனுப்பப்படும் நாவல்கள் ஈழத் தமிழரது சமூகம், பண்பாடு, பொருளாதாரம் வாழ்வியல் ஆகியவற்றை நிலைக்களனாகக் கொண்டு அமைதல் வேண்டும்.

நாவல்களின் நீளம் 50,000 வார்த்தைகளுக்கு மேற்படாமல் இருத்தல் விரும்பத் தக்கது:

நாவல்கள் தாள்களின் ஒரு பக்கத்தில் மட்டும் போதிய இடைவெளி விட்டு எழுதி அனுப்பப்படல் வேண்டும்.

போட்டிக்கு வரும் நாவல்கள் முன்பு வெளிவந்தனவாகவோ, பிற எழுத்தாளர்களுடையனவாகவோ, மொழி பெயர்ப்பாகவோ, தழுவலாகவோ இருக்கக் கூடாது. அவை, நாவல்களை அனுப்பும் எழுத்தாளர்களின் சொந்தப் படைப்புகளாக இருத்தல் வேண்டும்:

நாவல்களை அனுப்பும் எழுத்தாளர்கள் அவை தமது சொந்தப் படைப்புகள்தான் என்பதை எழுத்து மூலம் உறுதிப்படுத்தவேண்டும்.

நாவல்களை அனுப்புவோர் அவற்றின் ஒரு பிரதியைத் தம்முடன் வைத்திருப்பதோடு அனுப்பும் பிரதிகளைப் பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல்வேண்டும்; பிரதிகளை நேரில் கொண்டு வந்தும் கொடுக்கலாம்.

பரிசு பெறாத கதைகளைத் திரும்பிப் பெற விரும்புவோர் அதற்கு வேண்டிய அஞ்சற்றலைகளை வைத்து அனுப்பவேண்டும். போதிய அஞ்சற்றலைகள் வைத்து அனுப்பப்படாத பிரதிகள் திருப்பி அனுப்பி வைக்கப்பட மாட்டா.

ஒருவர் எத்தனை நாவல்களையும் அனுப்பி வைக்கலாம்.

போட்டிக்கு வரும் நாவல்களை மூன்று பேர் கொண்ட ஒரு நடுவர் குழு ஆராய்ந்து பரிசுக்குரிய நாவல்களைத் தெரிந்தெடுக்கும். நடுவர்களின் தீர்ப்பு இறுதி முடிவானதாகும்.

ஒரு பரிசுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட நாவல்கள் தெரிந்தெடுக்கப்பட்டால், அப்பரிசுக்குரிய தொகை சமமாகப் பகிர்ந்தளிக்கப்படும்.

பரிசுக் கதைகளை முதல்முறை வெளியிடும் உரிமை ஈழத்தமிழ் எழுத்தாளர் பேரவைக்கே உரியதாகும்.

போட்டிக் குரிய நாவல்கள் கிடைக்க வேண்டிய கடைசி நாள் 31—8—74. அதற்குப் பின்பு கிடைக்கும் நாவல்கள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டா:

நாவல்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டிய முகவரி:

இணைச் செயலாளர்,
ஈழத்தமிழ் எழுத்தாளர் பேரவை
111, பிக்கறிங்ஸ் வீதி,
கொழும்பு 13.

தரமான நாவல்களை உருவாக்கி இப்போட்டியில் கலந்து கொள்ளுமாறு அனைத்துலகத் தமிழ் எழுத்தாளர்கள் அனைவரையும் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்:

2—4—74 — ஈழத்தமிழ் எழுத்தாளர் பேரவை


வெற்றிக்கு வித்து

"தோல்விக்குத் துணை சோர்வும் சோம்பலும், வெற்றிக்கு வித்து வீரமும் திறமும்."

— சுவாமி சித்பவானந்தர்.

15 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி அறிவு நூல்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க் வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த. பெ. எண். 77, யாழ்ப்பாணம்.

# காசி வாழ்க!



எங்கள் வீட்டுக்குப் பின்னால் நிற்கின்ற அந்த மாமரத்திலமர்ந்து குயிலொன்று இனிமையாகக் கூவிக்கொண்டிருக்கிறது!

இது ஒவ்வோர் ஆண்டும் வழமையாக நடைபெறுகின்ற ஒரு நிகழ்ச்சி!

'யானை வரும் பின்னே— மணி ஓசை வரும் முன்னே' என்பார்கள்!

'வசந்தம்வரும்பின்னே' குயிலோசை வரும் முன்னே என்றும் ஒரு புதிய மொழியைக் கூறலாம்!

வசந்தத்தின் வருகையை அறிவித்தபடி — அந்தக் குயில் மாவிலிருந்து மயக்கும் தன் குரலால் கூவிக் கூவி நம்மை மகிழ்விக்கும்!

அதிகாலை வேளைகளில் அந்தக் குயிலின் இசையைக் கேட்டுக்கொண்டேயிருப்பதில் எனக்கு ஓர் அலாதி இன்பம்!

என்னோடு சேர்ந்து இன்னோர் குயிலும், மாமரத்துக்குயில் எழுப்புகின்றஇன்னிசையை ரசித்துக் கேட்பது வழக்கம்!

என் வாழ்வில் என்னோடு இணைந்திருக்கும் பெண் குயிலை நான் இங்கு குறிப்பிடவில்லை!

நான் குறிப்பிடுவது ஓர் கவிக்குயிலைப்பற்றித்தான்!

அந்தக் கவிக்குயிலுக்கு, மாங்குயிலின் இன்னிசையை கேட்பதில் ஓர் தனிச் சுவை!

எங்கே தொடங்குகிறது; எங்கே முடிகிறது என்றறிய முடியாதது குயிலின் ஓசை என்று அந்தக் கவிக் குயில் அடிக்கடி என்னிடம் கூறுவதுண்டு!

இப்போதும் எங்கள் வீட்டுக்குப் பின்னாலுள்ள அந்த மாமரத்திலமர்ந்துகொண்டு அந்தக் குயில் கூவியபடியே தான் இருக்கிறது!

ஆனால் அதன் இன்னிசையை கேட்டு ரசித்துச் சுவைக்கும் கவிக்குயில் மட்டும் இங்கே இல்லை!

அந்தக் கவிக்குயிலைக் காணாததால்தானோ என்னவோ—அந்த மாமரத்துப் பூங்குயிலும் இப்போது சோக இசை எழுப்புகிறது!

இரண்டு வசந்தங்களாகின்றன — அந்தக் கவிக் குயிலைக்கண்டு!

இப்போது அந்தக் கவிக் குயில் வெலிக்கடைச்சிறைச் சாலையை 'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை' யாகக் கருதிக்கொண்டு அங்கே தமிழ் சமுதாயத்தின் விடுதலைக்காக தவமிருந்து வருகிறது!

அந்தக் கவிக்குயில் யார் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும்!

அவனை வாழ்த்துவதற்கு நான் அருகதையுடையவனே!

ஏனெனில் நான் அவனை விட 40 நாட்கள் முந்திப் பிறந்தவன்!

ஆகவே தான் உணர்ச்சிக் கவிஞன் வாழ்க என வாழ்த்துகிறேன்!!

உலகநாடுகளின் விடுதலைப் போராட்டங்களில் ஈடுபட்டு—தியாகவேள்வி நடத்தியவர்களை உதாரணம் காட்ட வேண்டுமானால் இனி நாம் அங்கும் இங்கும் தேடி யலைய வேண்டியதில்லை! சரித்திர ஏடுகளைப் புரட்டிட வேண்டியதில்லை!!

வ. உ. சிதம்பரனாரையும் காந்தியடிகளையும், நேருஜியையும், சர்தார் பட்டேலையும், முஜிபுர் ரகுமானையும் உதாரண புருஷர்களாக கொண்டு வந்து நிறுத்தத் தேவையில்லை!

நம்முடைய உணர்ச்சிக் கவிஞன் காசி ஆனந்தன் ஒருவனே போதும்!

அவன் செய்துவரும் தியாகங்கள் ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்திலே இதுவரை யாருமே செய்யாதவை!

கைநிறைய சம்பளம் வாங்கிக்கொண்டு தான் பார்த்து வந்த அரச பதவியையே உதறி யெறிந்தவன் அவன்!!

அவனது குடும்பநிலையை உத்தேசித்து — பதவியை தூக்கி யெறியாதே என்று அவனுக்குப் புத்திமதி கூறியவர்களில் நானும் ஒருவன்!

அதற்கு அவன் கூறிய பதிலே அவனது நேர்மைக்கு எடுத்துக்காட்டு!

"இளைஞர்களை இன விடுதலைக்குப் போராடும் படி மேடைகளில் கூறிவிட்டு — நான் மட்டும் எப்படி எனது மனச்சாட்சிக்கு மாறாக சுய நலத்துடன் அரச உத்தியோகத்தில் ஒட்டிக் கொண்டு சுகமாக இருப்பது" என்பதே அவன் என்னிடம் போட்ட மாற்றுக்கேள்வியாகும்!

சொல்லும் செயலும் ஒன்றாக இருக்கவேண்டுமென்ற தூய்மையான அவனது உள்ளத்தை இந்தக்கேள்வி பளிச்சிட்டு காட்டியது!

அவன் தனது 35-வது பிறந்த நாளையும் சிறையிலே தான் கழித்தான்!

இந்த ஆண்டு தனது 36-வது பிறந்த நாளையும் சிறையிலே தான் கழிக்கிறான்!

அவன் வெலிக்கடைச் சிறைக்கு சென்றதால் அது இப்போது புனித பூமியாகி விட்டது!

அது இப்போது தவச்சாலையாகி விட்டது!

அந்தத் தவச்சாலையில் அவன் தனது 36-வது பிறந்த நாளை கொண்டாடுகிறான்!

அவன் வாழ்க! நூறாண்டு காலம் வாழ்க! என நான் வாழ்த்துகிறேன் —

வேறு சில நண்பர்கள் அவனிடம் கூறினார்கள் — "சமுதாயம் இன்னும்தயாராகவில்லை; அதற்குள் அவசரப்படுகிறாய்?" என்று!

'சமுதாயத்தை தயாராக்க வேண்டியது எனது கடமை' என்றான் அவன்!

அத்தகைய பொறுப் புணர்வு படைத்தவன் அவன்!!

தமிழ் சமுதாயத்தை-தமிழ் ஈழத்தின் மண்ணை — உள்ள படியே நேசிப்பவன் அவன்!!

அதனாலே சிறைத்துன்பத்தையும் சிரித்தபடி ஏற்றுக் கொண்டிருப்பவன் அவன்!

அவனும் அவனைப் போன்றே உள்ளே தவமிருந்துவரும் சிங்கத் தமிழ் இளைஞர்களும் தமிழ்த்தாய் பெற்றெடுத்த மாசு மறுவற்ற கட்டித்தங்கங்கள்!

காசி வாழ்க! மாசில்லாத அவனது உள்ளம் வாழ்க!!

ஈழமணித்திரு நாட்டில் அவழ்ந்து வரும் இளந்தென்றலும்— துடிக்கின்ற இளையதமிழ் நெஞ்சங்களும் —உன்னை வாழ்த்துகின்றன!

பாடிவரும் தேனீ நீ!! வருங்கால தமிழ் ஈழத்தின் பாட்டுடைத் தலைவன் நீ!!

ஈழத்தமிழ் விடுதலை வரலாற்றின் காவிய நாயகன் நீ!

வாழ்க, என் சகோதரனே! வாழ்க!!

நீ எங்கிருந்தாலும் வாழ்க!!

— கோவை மகேசன்.

# யாழில் எழுந்த தமிழோசை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் பெரும் புலவர் புலவர் மணி பெரியதம்பிப் பிள்ளை, யாழ்ப்பாணம் பிஷப், உட்பட நூற்றுக் கணக்கானோரின் வாழ்த்துச் செய்திகள் வந்து குவிந்திருந்தன. அவற்றுள் முக்கியமான சிலவற்றைப் படித்து முடித்தார், அமைப்புச் செயலாளர் திரு: துரைராசா:

ஈழத்தின் ஒரே தமிழ் அமைச்சர் என்று கூறப்படும் திரு. செல்லையா குமாரசூரியர் மாநாட்டில் கலந்து கொள்ளும்படி விடுக்கப்பட்ட அழைப்பை நிராகரித்து திருப்பி அனுப்பி விட்ட போதிலும் — இலர் இல்லாவிட்டாலென்ன, தமிழ் மாநாட்டை வாழ்த்திட இதோ நாமிருக்கிறோம் என்று கூறுவதுபோல—மலேசிய நாட்டுத் தமிழ் அமைச்சர் மாண்புமிகு மாணிக்கவாசகம் அவர்களும் தமிழ் நாட்டு உள்ளாட்சித்துறை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்களும் மாநாடு வெற்றிபெற வாழ்த்துச் செய்திகளை அனுப்பியிருந்தார்கள்;

அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள் தம்முடைய வாழ்த்துச் செய்தியில் பின்வருமாறு கூறியிருந்தார்.

"நான்காவது அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத் திருநகரில் நடைபெறுவது அறிந்து மகிழ்ச்சியடைகிறேன்:

"சொல்லாக்கத்திற்கும் நடை அழகிற்கும், கருத்தாழம் மிக்க சொற்களுக்கும் இனிதான செந்தமிழுக்கு இணையான மொழி உலகில் வேறெதுவும் இல்லை, என்பது பாவலர் கண்ட உண்மை.

"தமிழின் உயர்வுக்கு நாம் செய்துவரும் தொண்டுகள் போதா தென்பதைக் கருத்தில் கொண்டு, மேலும் சிறப்பான செயல் முறைகளை இம்மாநாடு அளித்திடும் என்றும் தமிழ் மொழியின் திறனை உலகுக்கு நன்கு எடுத்துக்கூறும் வழிமுறைகளை ஆய்ந்து தரும் என்றும் நம்புகிறேன்.

"பங்கு கொள்ளும் அனைத்துலகத் தமிழ் அன்பர்களுக்கும் மாநாடு அமைப்பாளர்களுக்கும் எனது வாழ்த்துக்கள்."

இதனைத் தொடர்ந்து அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் துணைத் தலைவரும் மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்தவருமான பேராசிரியர் ஜெனர்ட் பேசினார்.

"எத்தனையோ இடர்களுக்கு மத்தியில், தமிழ் மொழியில் உள்ள காதல் காரணமாகவே, அந்த இடர்களையெல்லாம் பொருட்படுத்தாமல் நாங்கள் யாழ்ப்பாணம் வந்திருக்கிறோம்: தமிழ் மொழியே எங்களை எல்லோரையும் இணைக்கிறது. பத்து வருடங்களுக்கு முன்தோன்றிய அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம் பல அரியபாணிகளை செய்திருக்கிறது. தமிழ் இலக்கியம், வரலாறு, கலாசாரம் மிகவும் தொன்மையானவை நீண்டகாலத்தைக்கொண்டவை. அவற்றைக் குறுகிய காலத்துள் ஆராய்ந்து முடித்துவிட முடியாது: தமிழை ஆராய, ஆராய அதன் மீது எங்களுக்கு அன்பு அதிகமாகிவருகிறது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற எங்கள் இலட்சியம் எப்போதும் வெற்றி பெற்றே தீரும்."

இவ்வாறு இரத்தினச் சுருக்கமாக இளைஞரான பேராசிரியர் ஜெனர்ட் பேசிமுடித்த பின்னர் முதியவரான இத்தாலிய அறிஞர் ஜோசப் விக்கி தமிழில் பேசினார்.

'இந்த மாநாட்டுக்கு வந்து சேருவதற்கு நாங்கள் பல கஷ்டங்களை அனுபவித்தோம் அப்படிக் கஷ்டப்பட்டாலும் இங்கு வந்து சேர்ந்தவுடன் அவற்றை எல்லாம் மறந்து விட்டோம்: இந்திய கலாசாரம் நிறைந்து காணப்படும் யாழ்ப்பாணநாட்டிற்கு வந்ததில் நான் மகிழ்ச்சியடைகிறேன்'

மூதுபெரும் அறிஞர் விக்கியின் உரையைத் தொடர்ந்து முத்து முத்தான தமிழ் சொற்கள் கணீரென்று நம் செவிகளில் தேனென வந்து விழுகின்றன. சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிகிறது. செக்கச் சிவந்த நிறமுடையார் — செந்தமிழ்ப் பெண்ணைப்போல சேலை கட்டிய சேயிழையார்—கனடா நாட்டு பேராசிரியை செல்வி பிரெண்டா பெக—(இல்லை இல்லை--தமிழில் அவர் பெயர் பிருந்தா") உரையாற்றினார்!

'நான் இதற்கு முன் நடந்த அநேக தமிழாராய்ச்சி மாநாடுகளில் பங்கு பற்றியிருக்கிறேன்! நான்காவது மாநாடு 1974ம் ஆண்டிலாவது யாழ்ப்பாணத்தில் நடக்குமா நடக்காதா என்ற சந்தேகம் இதுவரை எமக்கு இருந்துவந்தது. அது இன்று அறவே ஒழிந்தது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது; வெளிநாட்டிலிருந்துவந்து இந்த மாநாட்டில் பங்கு கொள்வதில் பெருமையடைகிறோம். யாழ்ப்பாண தமிழ் மக்களின் விருந்தோம்பலை இங்கு அனுபவிப்போம். இங்கிருந்து திரும்பும்போது— தமிழ் ஆராய்ச்சி முடிவுகளை எங்களுடன் நாம் எடுத்துச் செல்வது திண்ணம்; உங்களுக்கு நன்றி!

மணிமணியாக மழலைத் தமிழில் செல்வி பிருந்தா பேசியதை மக்கள் திறந்த வாய் மூடாது—வைத்த கண் வாங்காது கண்களை அகல விரித்தபடி ஆர்வத்துடன் கேட்டு அதிசயித்தனர். அவர்களை அப்படி அதிசயிக்க வைத்தது செல்வி பிருந்தா பேசிய சரளமான தமிழ் தான்!

இதையடுத்து திருமதி சரஸ்வதி பாக்கியராசா அவர்களும், அவரது மாணவிகளும், தமிழ் எழுச்சிக் கீதங்கள் சிலவற்றை பாடுகின்றனர்.

'தமிழன் என்றொரு
இனமுண்டு
தனியே அவர்க்கொரு
குணமுண்டு'

என்ற நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளையின் பாடலை அவர்கள் பாடிய நேரத்தில், நாம் மெய்மறந்து உள்ளம் உருகி, உடலெங்கும் உரோமாஞ்சிதம் ஏற்பட எம்மை மறந்து நிற்கிறோம்!

அப்படி மெய்மறந்த நிலையில் நான் நெடுநேரம் அப்படியே நின்று விட்டேன் போலும்!

'மதிய உணவுக்கு 'பாம் கோட்'டுக்கு வாருங்கள்' என்று கூறி ஓர் அழைப்பிதழை என்னுடைய கையில் நண்பர் சச்சிதானந்தம் கொண்டுவந்து திணித்த போதுதான் நான் மீண்டும் இவ்வுலகுக்கு வந்துசேர்ந்தேன்.

நண்பர் சச்சிதானந்தம் ஓர் அசகாய சூரர் இல்லாவிட்டால், ஈழத்தில் இதற்கு முன் என்றும் ஏற்பட்டிராத அளவு பஞ்சம் நிலவும் இக்காலத்தில் மாநாட்டு உணவு, உண்டி உறையுள் பொறுப்பை தாமே துணிச்சலாக முன்வந்து ஏற்றிருப்பாரா? ஏற்றது மட்டுமன்றி, மாநாட்டுப் பிரதிநிதிகளின் எடையை அதிகரிக்கச் செய்து அவர்களை இங்கிருந்து அனுப்பியிருப்பாரா?

உலக நாடுகள் பலவற்றில் உணவு அமைச்சர்கள் பலரும் தடுமாறும் போது மாநாட்டு உணவு 'அமைச்சராக' இருந்து அவர் காரியமாற்றிய திறமையைப் பார்த்தால், அவரையே இந்நாட்டின் உணவமைச்சராக்கலாம் என்று நான் நினைத்ததுண்டு. ஆனால் போயும் போயும் அவரும் நானும் இந்நாட்டில் தமிழர்களாகப் பிறந்துவிட்டோமே!

தாராளமை, கல்வி, துணிவுடைமை மூன்றும் நிறைந்த துடிப்புமிகு இளைஞரான நண்பர் "சச்சி"யைப் பற்றி பின்னரும் "பிய்த்துப்பிடுங்க" வேண்டியிருப்பதால், அவருடைய உணவு அழைப்பை மட்டும் இப்போலைக்கு ஏற்றுக்கொள்வோம்.

மாநாட்டு தொடக்கவிழா முடிந்து, மண்டபத்தை விட்டு மாநாட்டுப் பிரதிநிதிகள், ஒருவருடன் ஒருவர் குசலம் விசாரித்தபடி சிரித்துப் பேசிக்கொண்டு உணவுக்காகப் புறப்பட தயாராகும் அந்த நேரத்தில்தான் 'சிவபூசைக்குள் கரடி' யொன்று புகுந்தது.

—வளரும்

## தந்தையேவாழ்க!

தள்ளாத வயதிலும்
தளராவுள்ளத்துடன்
தமிழுக்காக—
தமிழினத்துக்காக—
தன்னலம் கருதா
துழைத்திடும்
ஈழத்தக் காந்தியே
எம் தலைவா!
எங்கள் தந்தையே.
செல்வா!
எழுபத்தாறைத் தாண்டி
இன்னும் பல்லாண்டு
நமக்கு வழி காட்டியாய்
வாழ்ந்திடுவாய்
ஐயா.

—நெடுங்கேணி நவம்

# காசி ஏன் கைதானார்?

கவிஞர் காசி ஆனந்தன் தன்மானம் மிகுந்த — சுதந்திர தாகமுள்ள ஒரு உணர்ச்சிக் கவிஞன்; ஆதலினால் அவர் கைதானார்! அண்டிப் பிழைத்து—அடிநக்கி எச்சிலை நாடி—எலும்புத் துண்டுக்காக ஏங்கி — தமிழினத்தைக் காட்டிக் கொடுத்து வாழத் தெரியவில்லை அவருக்கு — எனவே அவர் கைதானார்! வண்டமிழினத்தை வஞ்சித்து — சிங்கள ஏகாதிபத்தியத்திற்கு ஆலவட்டம் பிடிக்கத் தெரியவில்லை — எனவே அவர் கைதானார்! ஈழத் தமிழினம் வந்தேறு குடிகள் — கலப்புச்சாதி — அவர்கட்கென்று ஒரு தனிக் கலை—கலாச்சாரமில்லையெனக் கூறி சிங்களவரிடம் 'சபாஷ்' பெற அவருக்குத் தெரியவில்லை — ஆதலால் அவர் கைதானார்! இலங்கைத் தமிழரசுக் கட்சி இனிமேல் போராட்டம் எனத் தொடங்கினால் — அவர்களை விரட்டியடிக்கவும் அரசு ஆயுதப்படைகளை நாடத்தேவையில்லை. நாமே அவர்களை உதைப்போம் என முன்தானை வீரமுழக்கமிட அவருக்குத் தெரியவில்லை; அதனால் அவர் கைதானார்.

எம் தங்க மொழியாம் தமிழ் மொழிக்கு உரிமை வேண்டுமென சங்கம் முழங்கினார்—கைதானார்! உறங்கிக் கிடந்த தமிழினத்தைத் தட்டியெழுப்பி உரிமை முழக்கமிடச் செய்தார் கைதானார்! தாய் மொழியாம் தமிழுக்கு அரியாசனமமைத்தே தீருவோம் என்றார் கைதானார்! 'என் உயிர் தமிழுக்கே' என்றார் — கைதானார்! தமிழுக்கும் உரிமை கொடுங்கள் எனக்கேட்டார், கைதானார். எம் தேமதுரத் தமிழ் மொழிக்கு வாழ்வளியுங்கள் எனக் கேட்டார் — கைதானார்.

எம் வண்டமிழ் மொழியின் வாழ்வை வளர்ச்சியையே என்றும் சிந்தித்ததினால் அந்தத் தமிழையே—உயிராக — மூச்சாக கருதியமையால்—அந்தத் தீந் தமிழின் வாழ்வையே தன் கருத்தில் நிறையப் பதித்தமையால்—செந்தமிழையே பேசியமையால்—அவர் ஒரு குற்றவாளியானால்—ராஜத்துரோகியானால் — அந்தத் தவற்றினை—துரோகத்தினை செந்தமிழினம் அனைத்துமே செய்து கவிஞருடன் கூடவே சிறையிலிருந்து தமிழ்ச்சிந்து பாட தயாராகவே இருக்கின்றது!

பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு பாவலன் பாரதியும் புரட்சிக் கவிஞன் பாரதிதாசனும் எப்படி சிம்ம சொற்பனமாகக் காட்சியளித்தார்களோ — அதே போன்றுதான் இன்று சமதர்மம் பொதுவுடமை — என்ற போர்வைக்குள் இருந்து சர்வாதிகார ஆட்சி புரியும் சிங்கள ஏகாதிபத்தியத்திற்கு நம் உணர்ச்சிக் கவிஞரும் சிம்ம சொற்பனமாக விளங்குகின்றார்!

உறங்கிக் கிடந்த தமிழினத்தை—பாரதியும் - பாரதிதாசனும் எப்படியாகத் தட்டி எழுப்பினார்களோ—அதிலும் பார்க்க ஒரு படிமேல் நின்று கவிஞன் காசி ஆனந்தன் ஈழத் தமிழினத்தை உணர்வு கொள்ளச் செய்துவிட்டார்! ஆம்; எமக்கு வேண்டுவது சோறல்ல — சுதந்திரம்! என்பதனை பெரும்பதவியிலிருந்து கைநிறைய ஊதியம் பெற்று வந்த கவிஞர் அவர்கள் தமிழுக்கு எள்ளளவேனும் உரிமை அளிக்காத அரசியல் சாசனத்தை எதிர்த்து தேசியப் பேரவைக் குடியரசுக்கு விசுவாசமாக நடக்க தம்மால் முடியாதெனக் கூறி தன்பதவியை உதறித் தள்ளினார்! இந்தவொரு செய்கையினால் இன்று அவர் ஈழத் தமிழினத்திடையே ஒரு பெரும் தனியிடத்தைப் பிடித்துள்ளார்! இந்தவொரு செய்கையினால் ஈழத் தமிழினம் அனைத்தையுமே நன்கு தட்டி எழுப்பியுள்ளார்! இந்தவொரு செய்கை அவர் வடித்த உணர்ச்சி மிகு கவிதைகளையும் விஞ்சி நிற்கின்றது!

முன்பு உணர்ச்சிக் கவிஞரை சிலருக்கு மட்டுமே தெரிந்திருந்தது. ஆனால் இன்றோ மூலை முடுக்குகள் பட்டி தொட்டிகள் எல்லாம் கவிஞர் தம் தியாகப் பரணி பாடுகின்றன.

"மானம் இழந்து தலை சாய்ந்து
மாற்றார்க்கு அடிமைத்
தொழில் செய்து
கூனல் விழுந்த தமிழ் வாழ்வின்
கொடுமை தீர்க்கப்
புறப்பட்டேன்!"

**கலைநிதி-தேவா**

—தன் கனவினை நனவாக்கிட — தன்தொழிலைத் துச்சமென உதறித் தள்ளி விட்டு செங்கள மாடப் புறப்பட்ட கவிஞரின் எழுச்சி கண்டு மருண்ட அரசு—தன் சர்வாதிகாரத்தைப் பிரயோகித்து அவரைச் சிறையிலிட்டு வேடிக்கை பார்க்கின்றது! விடுதலை வீரர்கட்கு அதுவும் கவிஞர்கட்கு—சிறைச்சாலை மாங்குயில் கூவிடும் பூஞ்சோலையல்லவோ? 'தீய செயலைச் செய்து அதனால் ஏற்படும் சிறிது நேர இன்பத்தைவிட — நன்மையான செயலைச் செய்து அதனால் ஏற்படும் கொடுந் துன்பமே சிறந்தது' என்றார், விடுதலை வீரர் நேதாஜ் அதனை நிரூபித்துள்ளார் கவிஞர் அவர்கள்.

அரசு—கவிஞரைச் சிறையிட்டதால் தமிழினத்திற்கு நன்மையே செய்துள்ளது: ஆம்! அந்த உணர்ச்சிக் கவிஞரை சிறையிலிட்டதனால்—உறங்கிக் கிடந்த செந்தமிழ் உள்ளங்கள் அனைத்தும் குறிப்பாக — இளம் உள்ளங்கள் அனைத்தும் தீப்பிளம்பாகி—தினவெடுத்த தோள்களுடன்—எப்பக்கம் புகுந்திடும் சிங்களம் அது எத்தனை பட்டாளம் கூட்டி வரும் — அற்பமெனப்போம் அதனை — அதன் ஆதிக்கம் தன்னை அறுத்தெறிவோம் என வீர கர்ஜனையிட்டு தலைவர்களின் கட்டளையை எதிர்நோக்கி நிற்கின்றனர்!

'வாளை இடிக்கும் போர்ப்
பறையின்
வைர முழக்கம் வழிகாட்ட
தானே எடுத்துப் புறப்பட்டேன்
தமிழர் வாழப் புறப்
பட்டேன்'

ஆம்; அவர் தமிழர் வாழ சிறை சென்றுவிட்டார் — தமிழர் வாழத் தன்னை அர்ப்பணித்து விட்ட அந்தக் கவிஞனின் எழுற்சியினால் உந்தப் பெற்ற தமிழினம் தழைத்தே விட்டது!

—'என்றும் இனிய தமிழை
—அட
இன்னுயிர் மூச்சை அமுதக்
குழம்பை
மன்றம் மதித்திட வில்லை
—என்றால்
மக்கள் உலகம் எதுக்கடா
தேவை?

என சுமார் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு சங்கம் முழங்கிய கவிஞர் அவர்கள் இன்று இந்தக்கேள்வியைப் பகிரங்கமாகக் கேட்டிடப் புறப்பட்டு விட்டதனால் கைதானார்! அவரது சங்கொலி கேட்டு தானை புறப்பட்டு விட்டது! அன்று கவிஞர் கண்ட கனவு இன்று நனவாகிக்கொண்டு வருகின்றது! அவரது கனவுகள் அனைத்தும் நிறைவுறும் நாள் வெகுதூரத்தேயில்லை...

கவிஞரது கனவை அவரை முன் நிற்க வைத்தே நிறைவேற்றுவதற்கு தமிழர் தானை துடிக்கின்றது: காரணமின்றி — அநாவசியமாக — கவிஞரை சிறையிருத்தியிருப்பதனை தமிழ்க் குலம் அறவே வெறுக்கின்றது! எனவே — அரசினர் கூடிய விரைவில் கவிஞரையும்—ஏனைய எம் தொண்டர்களையும்வெளியே விடுமாறு கேட்டுக்கொள்கிறோம்—அன்றேல் அவர்களை வெளியே விடும்படி தமிழர் தானை அரசினை நிர்ப்பந்திக்கும்!

## கவிஞன் ஒருவன் கவிதை படிக்கின்றான்...!

- ஏ. நவரெத்தினராசா குரூஸ் -

கவிஞன் ஒருவன் கவிதை
படிக்கின்றான்...!
யாரோ எழுதிவிட்ட கவி எனினும்
கவிஞன் ஒருவன் கவிதை படிக்கின்றான்
கவிஞன்,—
கவிதையையே படைத்தவன் இவன்
ஆனால்;—
கவிஞனுக்கு இப்போ
கவி எழுதப் பெருந் தடை
யார் யாரோ எழுந்திடுவார்
இதுதான் கவிதை என்பார்
இல்லை—
இது பிழை என்று சொல்ல கவிஞன்
துடிக்கின்றான்.
ஓங்கி இருந்த குரல்
ஒடுங்கி விட்டதனால்
ஏங்கித் தவிக்கின்ற கவிஞனுக்கோ
உணர்ச்சி வெள்ளம் பாயத்துடிக்கிறது
இருந்தாலும்—
கவிஞனுக்கு கவிதை
எழுதப்பெருந்தடை
ஆதலினால்,—
யாரோ எழுதிவிட்ட கவி எனினும்
கவிஞன் கவிதை படிக்கின்றான்
இதுதான் உனக்குக் கவி
வேறு எழுதாதே என்று சொல்லி
வாலை முறுக்குகின்ற வக்கில்லா
மூடனையே
சாடத் தொடங்கிவிட்டால்
சாகாமல் என்ன செய்வான்
என்பதனால்
என கவிஞன் சாடாமல் இருக்கின்றான்
படிக்கும் கவிதையிலே
பல பிழைகள் இருந்திடினும்
பொறுக்கும் கவிஞனுக்கோ
பெருமனது
ஏனென்றால்—
அவன் அஹிம்சைப் பிரியன்
அண்ணலின் சீடன்
உணர்ச்சிக் கவிஞன் இவன்;
உண்மையில் ஓர் கவிதை
படைத்துவிட்டால்;
படிக்கும் மனதுக்குப் பிடித்து விடும்;
பைத்தியமாய் எதையெதையோ
படிக்கக் கொடுக்கின்ற பாமரர்க்கும்
அறம்விளங்கும்
பொறுத்துப் படிக்கின்ற
பொய்க்கவிதை ஓர் நாளில்
அவன்,—
முடிக்கின்ற நேரமோ தொலைவிலில்லை
தனக்காக ஓர் நாளில் தமிழ் கவிஞன்
தனித்துப்படைத்திடுவான் ஓர் கவிதை
ஆனால்,—
இன்று பொறுத்து இருப்பதனால்
யாரோ எழுதிவிட்ட கவி எனினும்
கவிஞன் ஒருவன் கவிதை படிக்கின்றான்.

## இலக்கிய உலகு

-வேதாளம்-

## பெண்குழந்தை பிறந்தால் தான் எழுத்தாளன் ஆகலாமாம்!

சமீபத்தில் வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி மண்டபத்தில் ஓர் எழுத்தாளரின் நாவல் வெளியீட்டு விழா நடைபெற்றது.

அவ்விழாவில் மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவும் கலந்துகொண்டார்; வெளியீட்டு விழா நடைபெற்ற நாவலின் ஆசிரியருக்கு அந்நாவல் வெளியீட்டுக்குச் சில நாட்களுக்கு முன்புதான் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதை ஆதாரமாக வைத்துக் கொண்டு, மேற்படி நபர் எழுத்தாளராக அன்றுதான் மாறியதாக டொமினிக் ஜீவா அடித்து முழக்கினார்!

ஆச்சரியம்? ஆனால் உண்மை!

உண்மைக்கான ஆதாரங்கள் என்ன?

சா... ஆதாரம் இல்லாமல் பேசுவாரா அவர்? பின்வரும் ஆதாரங்களை அள்ளி விசினார்!

கலாநிதி கைலாசபதி அவர்கள் ஓர் எழுத்தாளர்; அவருக்கு முதல பிறந்தது பெண் பிள்ளை.

திரு. பிரேம்ஜி அவர்கட்கு முதல் பிறந்தது பெண் பிள்ளை. அவரும் ஓர் எழுத்தாளர்.

கலாநிதி சிவத்தம்பிக்கும் முதலில் பிறந்தது பெண் பிள்ளை, இவரும் ஓர் எழுத்தாளர்.

டொமினிக் ஜீவாவுக்கும் முதற் பிறந்தது பெண் பிள்ளை இவரும் ஓர் எழுத்தாளராம்.

தேவரையாளி இந்துக்கல்லூரி மண்டபத்தில் நாவல் அறிமுக விழா நடாத்திய நாவல் ஆசிரியர்க்கும் பிறந்தது பெண் பிள்ளையாதலால் அவர் பிரபல எழுத்தாளராக மாறிவிட்டாராம்!

அணுகுண்டு கண்டுபிடித்த ஐன்ஸ்டீனே வியக்கக்கூடிய கண்டுபிடிப்பு. அதுவும் ஈழத்தில் 'முற்போக்குகளால்' உருவாகியிருக்கிறது.

சிலசமயம் தென்னிந்தியப் பத்திரிகைகள் கட்டுப்படுத்தப்பட்டமையால் இந்த 'அறிவு விருத்தி' உண்டாகி இருக்கலாம்!

காரல்மாக்சுக்கு முதலில் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதுவும் வறுமையின் கொடுமையால் இறந்துவிட்டது: இவர்களின் சித்தாந்தத்தின்படி, இவர்கள் தூக்கிப்பிடிக்கும் மாமேதை கால்மாக்ஸ் ஒரு எழுத்தாளரேயல்ல—கால்மாக்ஸ் தனது கல்லறையிலிருந்து எழும்பி வந்து ஒரு பெண் பிள்ளைபெறும்வரை!

மாமேதை லெனினுக்கு பிள்ளைகளே இல்லை — காரணம் அவர் பிரம்மச்சாரி அல்ல!

லெனின் 250 புனைபெயர்களில் எழுத்தாளராகி விளங்கினார். புதிதுலகம் ஒன்றைத் தன் எழுத்தால் சிருஷ்டித்தார்;

அவர் ஓர் எழுத்தாளர் அல்ல! பெண் குழந்தை இல்லாதவனும் எழுத்தாளனா?

அப்போ டொமினிக் சுட்டிக்காட்டிய இக்கம்யூனிஸ்ட் குஞ்சுகள்தான் எழுத்தாளர்களா?

பதில் இறுப்பார்களோ? பார்த்துவிட்டுப் போவார்களோ? யாருக்குத் தெரியும்?

—இவ்வாறு வேதாளத்துக்கு எழுதிய கடிதமொன்றில் தோழர் 'விசர்க்குஞ்சு' கேட்கிறார்.

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

**சென்ரல்** -(மருதானை) 2,6,9 30

**சிறந்த கதை கருத்துள்ள வசனம்**
**இனிய பாடல்கள் சிறந்த நடிப்பைக்**
**கொண்ட படம்.**

**சிவாஜி கணேசன் — சரோஜாதேவி**

எம். ஆர். ராதா, ரங்கராவ், முத்துலெட்சுமி

முதலியோர் நடித்த-

**இருவர் உள்ளம்**

## 'சிமோல்' ஆட்டம்!

கல்வி மந்திரி மஹ்ரூத்திற்கு யாழ் கல்வித்திணைக்களத்தினர் 'கிங்ஸ் கவுஸி'ல் வைத்து விருந்தளித்தனர். யாழ் கல்வி அதிகாரிகளும், சேர்த்து வைத்த மதிய உணவில் பங்கு பற்றிய 'சிமோல்' மனிதர் கோப்பாய்தொகுதி மக்களால் ஒரு தடவைக்குப் பல தடவை ஓட ஓட விரட்டி அடிக்கப்பட்டவர், அரசியில் அதிகாரியானவர் —எப்படியோ அன்று தன் செலவிலோ தன் ஆதரவாளர் செலவிலோ வாய் நனைத்து விட்டார். அங்கு நடைபெற்ற மதிய உணவு விருந்தில் கை கால் புரியாது ஆடி ஆடி கதிரையில் முடங்கியவர் ஒலருடன், சில அதிகாரிகளுடனும் 'கன்னு பின்னு' என்று கதை அளந்ததாக அறியப்படுகின்றது.

அன்று மாலை, தமிழ் மக்களின் பண்பாட்டையும், செயல்திறனையும் எடுத்துக் காட்டும் சின்னமாக விளங்கும் இராமநாதன் இசைக் கல்லூரிப் பொறுப் பேற்பு விழாவில் விழல்தனமாக நடந்த சங்கதி சந்தி சிரிக்கின்றது.


மேடையில் வீற்றிருந்த இந்தச் 'சிமோல்' மனிதர் அங்கு பேசிய பேச்சுக்களைக் கேட்டு அர்த்தம் புரியாது. அநர்த்தமான கட்டங்களிலும் கைகளைத் தட்டி தமிழன் பண்பாட்டை காற்றில் பறக்கவிட்டுக்கொண்டிருந்தார். அவர் அடிக்கடி கை தட்டலை அவதானித்த கல்வி அமைச்சர் மெல்லச் சிரித்துக்கொண்டிருந்தார்.

தண்ணி போட்டு கால்கை தடுமாறி கண்டபடி உழறிக் கொட்டுவோர் கூட்டத்திலுல்தான் தமிழ் மக்கள் உரிமையும், பண்பாடும் காப்பாற்றப்படுமென்று கூறுவது நெருப்பாற்றில் மயிர்ப்பாலம் போட்ட கதையாகத்தானிருக்கும்.

—அப்பலோ

4-வது வாரம் **கிங்ஸ்லி**-பிளாசா
லிடோ (யாழ் நகர்)

**முத்துராமன், ஜெயலலிதா, சுந்தரராஜன்,**
**சாவித்திரி, சோ, மனோரமா, சசிகுமார்,**
**ஸ்ரீலேகா, M. R. R. வாசு, நடித்தது.**



**சூரியகாந்தி**

டைரக்ஷன்: சீனிவாசன்

**5-வது வாரம்**

**கெயிட்டி**



**ஜக்கம்மா**

தமிழில் வெளிவரும்
முதல் கௌபோய்
திரை விருந்து

**ஜெய்சங்கர் - சாவித்திரி**
**உஷா S. V. சுப்பையா**
**தேங்காய் சீனிவாசன்.**
**மனோரமா**

**13ம் திகதி முதல்**

**செல்லமகால்**

**ரோனி ரணசிங்க**
— நடித்த —

**கலியுக காலம்**

**வெகு விரைவில்**

**எம். ஜி. ஆர்.**
— நடித்த —

**அன்னமிட்டகை**

இப்பத்திரிகை சிரோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194 ஏ. இலக்கத்தில்
1974ம் வருடம் ஏப்ரல் மாதம் 7-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.